

விசேட விலை 10/=

# ஈழத்து திராவிடம்

பிரதம ஆசிரியர் - அலைபேசி : 076 7687107

இதழ் – 03 | ஒரு திங்கள் வெளியீடு | ஆடி – 1 – 2016




# எங்களுக்கு வேண்டாம் பேப்பர் ?

(நமது நிருபர் செ.லக்சனா)

வடபுலத்தில் பத்திரிகை ஒன்றை புதிதாக கொண்டு வருவதற்கு பல்வேறுபட்ட ஆய்வுகள் அண்மை நாட்களில் மறைமுகமாகவும் நேரடியாகவும் மேற்கொள்ளப்பட்டிருந்தன அந்த ஆய்வு குளிர் நிறைந்த கண்ணாடிக் கதவுகளுக்குள் இருந்து செய்யப்பட்டதல்ல, ஆய்வு செய்வதற்கு பலமுறைகள், உசாவல்கள் இருப்பினும் இந்த ஆய்வு நேரடியாக களத்தில் சென்று செய்யப்பட்ட ஆய்வாகும் ஏறத்தாள ஒருவருட காலத்திற்கும் அதிகமாக இதன் ஆய்வுக்காலம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆய்வாளர், ஆய்வாளர்கள் ஏனைய பத்திரிகைகளை தெருக்களில் கொண்டு விற்றும் பேருந்து, கடைகளில் விற்றும் அதே வேளை பலர் கூடி பேசும் திண்ணை அரசியல் களத்தில் நின்றும் அதேவேளை பத்திரிகை ஜாம்பவான்களின் கருத்துக்களைப் பேசும் சாதாரண குடிமக்களிடமும் வினாப்பத்திரம் கொடுத்தும் சாதாரண தெருப்பித்தன் போன்று கடைத் தெருவில் நின்றும் செய்யப்பட்ட ஆய்வு இது இந்த ஆய்வின் முடிவு "எங்களுக்கு பேப்பர் வேணாம்" ஆயிரம் பேரை கவனத்தில் கொண்டால் பத்தில் ஒருவர் பத்திரிகை வாங்குகிறார். அவர் வீட்டிலுள்ள முதியவராக இருக்கிறார்.

அல்லது வேலையில்லா தரப்பினராக இருக்கிறார். அதேவேளை ஏதாவது ஒரு நிறுவனம் சார்ந்து இயங்குபவராக இருக்கிறார் என்பதை ஆய்வு சொல்கிறது.

இப்பத்தி எழுதும்வரை வடக்கிலிருந்து இன்னும் மூன்று வாராப்பத்திரிகைகளும் ஒரு தினசரி பத்திரகையும் வெளிவருவதற்கு முன்னாயத்தங்கள் இடம்

(10ஆம் பக்கம் பார்க்க)



# ஏன் இப்படி யாழ்ப்பாணம் ?



## கவலையுடன் மனம் திறக்கிறார் இந்தியத் தூதுவர்



யுத்தத்தின்பின் வடபுலத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இந்தியா குறித்து அதிக எதிர்பார்ப்புகள் எம் மக்களிடையே இருப்பதைக் கவனத்திற்கொண்டும், இந்தியத்தூதரகத்தின் செயற்பாடுகள் எவ்வாறு வடபுலத்தில் இடம்பெறுகின்றன என்பது குறித்து ஈழத்துத்திராவிடம் நேரடியாக இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நடராஜனையே சந்தித்து சில கேள்விகளை எழுப்பியது. அந்த நேர்காணல் வாசகர்களுக்காக விரிகிறது.

**கேள்வி :-**

யுத்தத்தின் பின்னரான யாழ்ப்பாணம் அல்லது வடபுலத்தில் இந்திய அரசாங்கத்தின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கிறது?



நேர்காணல் :- ச.திருச்செந்தூரன்
:- வ.சபேஸ்கரன்

**பதில் :-**

2009 மேயுடன் யுத்தம் முடிந்தபின்பு எங்களது செயற்பாடுகள் அதிகளவில் வடபுலத்தை மையமாக கொண்டு இடம்பெற்றன. வடமாகாணத்தில் அபிவிருத்தி, மேம்பாடு, புனரமைப்பு ஆகிய

(03ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே ...


### திரைவிலகும் இரகசியம்







### முள்ளிவாய்க்கால் முத்தர்



புலமைப்பரிசில் வினாப்பத்திரம் உள்ளே... பக்கம் 06

பகுத்தறிவு புகட்டும் பன்மைத்துவ மாத இதழ்

உனது எண்ணம் வலிமையாக இருந்தால் அதுவே வாழ்க்கையாகும்.

– யதார்த்தக் கவிராயர்–

ஈழத்து திராவிடம்
விசேட விலை 10/=
11/21, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

## மதம் சார் நுன் அரசியல்

பொது உடைமை, மார்க்சிசம் என்ற சொல்லாடல்களை வெகுஜனமயப்பட்ட ரீதியாக அறிமுகப்படுத்தியவர் கார்ல்மார்க்ஸ் அவர் உதிர்ந்த பல விடயங்களில் ஒன்று மதம் பற்றிய பார்வை, “மதம் ஒருஅபினி” என்று மார்க்ஸ் குறிப்பிட்டார்.

இது இவ்வாறு நமது சமூகம்உள்ளிட்டஅனைத்து சமூகத்தின் இயங்கியலுடன் ஒரு மறைமுக அல்லது நுண்ணரசியல் போன்று ஆழமாய் மறைந்திருப்பது பலரும் அறிந்ததே அந்த வகையில் இந்த மத ரீதியான நடைமுறைகளோடு பாலின அரசியலும் பல இடங்களில் இயல்பூக்கம் பெற்று வருவதை நாம் கண்டும் காணாமல் விட்டுவிடுகிறோம்.

‘பெண் விடுதலை, சம உரிமை’ என்று வாய்கிழிய கத்திவிட்டு வீட்டிற்கு சென்றவுடன் மனைவியை அடித்து துவம்சம் செய்யும் துன்பியலை பல இடங்களில் பார்த்திருக்கிறோம் அதேவேளை தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் ஆலயங்களில் பெண்கள் உட்செல்ல தடை விதிக்கப்பட்டு பல வருடங்களாக அமுலில் இருப்பது யாவரும் அறிந்ததே.

பெண்கள் அதிக தூரம் நடக்கமாட்டார்கள், பெண்கள் மென்மையானவர்கள் என பல நொண்டிச் சாட்டுகள் சொல்லப்பட்டாலும் அது பெண்ணின் இனப் பெருக்கம்சார் நடைமுறைகளோடு ஒத்திருக்கிறது.

பெண்களுக்கு வரும் மாதவிலக்கு சார்ந்து அத்தடை அங்கு விதிக்கப்பட்டிருக்கிறது.

பௌத்தம், சமணம் போன்ற மதங்களின் எழுச்சி சங்க மருவிய, பல்லவர் காலங்களில் இடம் பெற்ற போது மீண்டும் சைவம், வைணவம் தழைத்தோங்கியதற்கு எமது சமயங்கள் உடலைக் கொண்டாடுவதனூடாக முத்தி இன்பத்தை அடையலாம் என்று அறம், பொருள், இன்பம், வீடு என்ற நடைமுறைச் சித்தாந்தத்தை எமக்குக் காட்டியிருக்கிறது.

இனப் பெருக்கம்தான் உலகின் ஆதார சக்தி உலகின் செய்ய முடியாத மகத்துவமான உற்பத்திகளுல் முக்கியமானது குழந்தை பெறுதல் என்பது மிகப் பெரும் மகத்துவமான உற்பத்தி பெண் மிகப்பெரும் ஆதார சக்தி ஆகிறாள் எமது சமயங்களின் ஆரம்ப காலம் தாய்த்தெய்வ வழிபாடுடன் தான் ஆரம்பித் திருக்கிறது இதனை இந்து வெளி பறைசாட்டியிருக்கிறது.

உலகின் ஆதார சக்தியாக இருப்பது இனப் பெருக்கத்தோடு சார்புபட்டது.

இது ஒரு புறம் இருக்க மதத்தை நம்புகிறோம், மதம்தான் எல்லாம் என நம்புகிறோம் இந்த நூற்றாண்டிலும் இந்த நம்பிக்கை வலுப்பெற்றிருப்பது ஆச்சரியமே அகிலத்தையே தன்கையில் கட்டுண்டு வைத்திருக்கும் மனிதன் கண்ணால் கானாத கடவுள் சார் மத்தை நம்புவது மிகவும் ஆச்சரியமானதே இப்படியான இறைவன் இறைசார் சிந்தனை என்று சொல்லிக்கொள்ளும் இந்த மரபிற்கு பின்னால் நுண்ணரசியல் செயற்படுகிறது.

இவையாவும் பகுத்தறிவு சார் சிந்தனையோடு நோக்கவேண்டியது. இங்கு ஆனாதிக்கம் சார் அரசியல் மறைந்திருக்கிறது எந்த மதத்திலும் போப் ஆண்டவியையோ, பெண் இமாமையோ சங்மித்தை தவிர எந்தவொரு புத்திரியையோ (புத்தர்) நாம் கண்டதில்லை.

தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் கலாசாரம் நம்மிடையே சினிமா மற்றும் ஏனைய காரணிகள் மூலம் பற்றிப் பீடிக்கும் நிலையில் இந்த நடைமுறையில் இங்குவர எவ்வளவு காலம் தான் நீடிக்கும்.

தடை இனி வருங்காலங்களில் எம்மையும் பீடித்து எமது பெண்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கலாம். உசாரம்மா... உசாரு... கவனம் அந்த அரசியல் எமக்கு வேண்டாம்... ஏற்கனவே பலவற்றைப் பார்த்து ஏமாந்தாகி விட்டது போதும்...

–ஆசிரியர்–


# எதற்கு போனார் மைத்திரி ?



வளர்ந்த நாடுகளின் உச்சி மகாநாடு ஒன்று அண்மையில் ஜப்பானில் நடைபெற்றது அதில் வளர்ந்த நாடுகள் மட்டுமன்றி வளரும் நாடுகளில் தலைவர்களும் அழைக்கப்பட்டனர்.

அதில் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா பிரதான விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். இலங்கை ஒரு பொருளாதார வாய்ப்புடைய சந்தை சக்திகளைக் கொண்டுள்ள பாரியதொரு நாடல்ல, அதிக ஏற்றுதி செய்யும் எண்ணெய் வள நாடும் கிடையாது அப்படியாயின் ஏன் இலங்கை ஜனாதிபதி ஜி7 க்கு அழைக்கப்பட்டார் என்பதே பிரதான கேள்வியாகும்.

### கலாநிதி கே.ரி.கணேசலிங்கம்




இதற்கு சரியாக விடையளிப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

2015 ஜனவரிமுதல் இலங்கையில் அமைந்துள்ள புதிய அரசாங்கம் மேற்கு நலனுக்கு இசையக் கூடியது என அமெரிக்கா உட்பட மேற்குலகம் கருதியது.

இது புதிய அரசாங்கம் பதவியேற்ற கடந்த ஒரு வருடம் மிக சுமூகமாகவும் சௌகரியமாகவும் அமைந்தது ஆனால் கடந்த ஒரு வருடத்தில் இலங்கை உட்கட்டமைப்புக்காகவும்பொருளாதார அடிப்படைத்தேவைக்காகவும் பாரிய ஒத்துழைப்புகளை புதிய அரசாங்கம் எதிர்பார்த்தது. அத்தகைய நம்பிக்கையில் சீனாவுடனான பொருளாதார உடன்படிக்கைகளை கைவிட்டதுடன் கொழும்பு, துறைமுக நகர அபிவிருத்தியை கைவிடுவதாக அறிவித்தது.

ஆனால் இலங்கையின் புதிய அரசாங்கம்எதிர்பார்த்தது போல் மேற்குலகம் பொருளாதார ஒத்துழைப்பினை வழங்க முன்வர வில்லை.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மீது விதிக்கப்பட்ட தடைகூட முற்றாக நீக்கப்படவில்லை. அரைகுறையான தளர்வுகளோடு செயற்படுகிற போக்கு காணப்படுகிறது.

புதிய அரசாங்கம் தேர்தல்களுக்காக அறிவித்த சலுகையில் அதிக நெருக்கடியை எதிர் கொண்டதுடன் அதை சரிவர பேண முடியாத நிலையை எதிர் நோக்குகிறது.

உட்கட்டமைப்பு முயற்சிகள் அதிகளவில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்பு நிகழவில்லை என்ற குற்றச்சாட்டு சாதாரண மக்கள் மத்தியில் ஆரம்பித்துள்ளது.

நடுத்தர, உயர்தர, மத்திய தர வர்க்த்திடம் புதிய அரசாங்கம் அதிக வரிவிதிக்கும் அரசாங்கம் என்ற பெயரை ஏற்படுத்தியுள்ளது.

இவற்றுக்கெல்லாம் தெளிவான காரணம் இலங்கையில் புதிதாக பதவியேற்ற மைத்திரி – ரணில் கூட்டு அரசாங்கத்தின் தெளிவற்ற வெளியுறவுக் கொள்கை என்பது புலமைத்தளத்தில் வெளிப்படுத்தப்படும் விடயமாகிவிட்டது.

காரணம் ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கை அந்தநாட்டினை (அதிலும் இலங்கையை) உயிர்வாழ வைக்கும் என்பது பிஸ்மார்க்கல் இருந்து கென்றிக் கிஷிங்கர் வரையும் உணர்த்தப்படும் உண்மையாகும்.

ஆனால் இலங்கை மட்டுமல்ல உலகிலுள்ள ஒவ்வொரு அரசாங்கமும் தமது ஆட்சிக் காலத்தில் தெளிவான வெளியுறவுக்கொள்கையை வகுத்து பொருளாதார, அரசியல், இராணுவத் தேவைகளை அடைய போட்டியிடுகின்றன.

இலங்கை போன்ற தீவு நாடுகள் ஏனைய நாடுகளை விட வெளியுறவுக்கொள்கையில் அதிக முனைப்புடையவையாக காணப்படுவதற்கு அவற்றில் புவியியல் சார் தன்மை முக்கிய காரணியாகும்.

அதனை உணர்ந்து கொண்ட இலங்கை ஆட்சியாளர்கள் அவ்வப்போது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை மாற்றி மாற்றி கையாண்டு வருகின்றனர்.

பழைய ஆட்சியாளரின் சீனச்சார்பு வெளியுறவுக் கொள்கையும் சீனாவின் இலங்கை மண்ணின் மீதான பிரவேசமும் அதிகரித்திருந்தமை மேற்குலகத்தினாலும் இந்தியாவினாலும் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அதனால்தான் ஆட்சி மாற்றம் என்ற எல்லைக்குள் இரண்டு தரப்பும் அடாவடியாக புகுந்த பழைய ஆட்சியின் கனவைக்குலைத்தது.

அத்தகைய குழப்பத்திற்கு காரணமும் உதவியுமாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் மேற்குடனான ஒத்துழைப்பு கடந்த மூன்று மாதங்களில் குறைய ஆரம்பித்ததை காண முடியும்.


ஏனெனில் மேற்குலகின் ஒத்துழைப்பும் உதவியும் பொருளாதாரத்தில் மைத்திரி – ரணில் எதிர்பார்த்தது போல் கிடைக்கவில்லை.

அது மட்டுமன்றி மேற்கின் உள்ளநாட்டுக்குள்ளே உள்ள நெருக்கடியும் சர்வதேச அரசியலில் எதிர் கொள்ளும் சவாலும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைந்து வருகிறது.

இதனால் உலக நாடுகளை அல்லது ஆசிய நாடுகளை நோக்கி தமது பொருளாதார தேவையை நிறைவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் புதிய அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அதற்கான முயற்சியிலேயே பிரதமரும், ஜனாதிபதியும் உலக நாடுகளுடன் கூட்டு வர்த்தக உடன்படிக்கைகளிலும், உதவிகளைப் பெறு

(10ஆம் பக்கம் பார்க்க)



# ஏன்...

பணிகளில் இந்தியா முனைப்புடன் ஈடுபட்டது இதில் இந்திய வீட்டுத்திட்டம் மிக முக்கியமானது.

42 ஆயிரம் வீடுகள் கட்டிமுடித்து மக்கள் குடியேறிவிட்டார்கள் அதேவேளை காங்கேசன்துறை துறைமுகப் புனரமைப்பு, பலாலி விமான ஓடுபாதை புனரமைப்பு திருக்கேதீச்சர ஆலய புனரமைப்பு யாழ்.பல்கலைகழகத்தின் விவசாய, பொறியியல் பீட மேம்பாடு, குருநகரில் மீன்வலை உற்பத்தி நிறுவனம், விவசாயிகளுக்கு நூறு உழவு இயந்திரங்கள் கையளிப்பு, ஏராளமான துவிச்சக்கர வண்டிகள் கையளிப்பு, துரையப்பா விளையாட்டு மைதான புனரமைப்பு யாழ்.கலாச்சார மண்டபம் அமைத்தல் போன்ற பல்வேறுபட்ட பணிகளில் இந்திய அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

**கேள்வி :-**

போரின் போது இந்தியா இலங்கை மீது கொண்டிருந்த கரிசனை போரின் பின்னர் குறைந்து போனதாக புலமைத்தரப்பில்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறதே?

**பதில் :-**

குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது மிகவும் எளிது ஆனால் இந்திய அரசாங்கம்பொறுப்புடன்பணிபுரிந்து வருகிறது. இதனை இங்குக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

தமிழர்கள் எமது உறவுகள் அவர்களை கைவிடக் கூடாது அதேவேளை கைவிடவும் முடியாது. தமிழர்கள் என்பதைவிட இந்தியா அரசாங்கம் மனிதாபிமான ரீதியாக வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகிறது.

அதேவேளை இலங்கை ஒரு குடியரசு அதன் செயற்பாட்டுக்குள் நாம் ஒரு அளவுக்கு மீறி தலையிட முடியாது அப்படிதலையிடுவது முறையுமல்ல, உள்ளக பிரச்சனைகளை நாட்டுக்குள்தான் தீர்க்க வேண்டும்.

**கேள்வி :-**

வடபுலத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு எவ்வாறான உதவிகளை செய்து வருகிறீர்கள்?

**பதில் :-**

ஏறத்தாழ நூற்றுக்கணக்கான பாடசாலைகளை புனரமைப்பு செய்துவருகிறோம். அதேவேளை உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தால் வருடாந்தம் 700 புலமைப்பரிசில்களை வழங்கிவருகிறோம்.

இப்புலமைப்பரிசில் நூறு வீதம் வழங்கப்படுகிறது. ஆனால் இந்தப் புலமைப்பரிசிலை பெற்று இந்தியாவில் சென்று கல்வி கற்கும் வடபுல மாணவர்கள் மிக மிக குறைவு இதனை நினைக்கும் போது மன வருத்தமாக இருக்கிறது.

அதேவேளை சகோதர இன பிள்ளைகள் அதிகளவில் இப் புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் புலமைப்பரிசில் மருத்துவம் தவிர கலை, கலாசாரம், கணனி போன்ற பல துறைகளில் கல்விகற்க வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இது குறித்துஎப்பொழுதும் எம்மை தேடிவந்து இப் புலமைப்பரிசில்லைப் பெற்று கல்விகற்க முடியும்.

**கேள்வி :-**

மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்த எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறீர்கள்?

**பதில் :-**

2015ஆம் ஆண்டு நூறு வரையிலான முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்கள்.

அவர்கள் வருகை தந்தது சிறு முதலீட்டு திட்டங்களை முன்னெடுப்பதற்கு அவ்வாறு முன்னெடுப்பதன் மூலம் நூற்றுக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கும்.

ஆனால் இதற்கு மத்திய அரசாங்கமோ, வடமாகாண அரசாங்கமோ போதிய அக்கறையை காட்டவில்லை. ஆகையால் நாம் என்ன செய்யமுடியும்.

**கேள்வி :-**

இந்திய வீட்டுத்திட்டத்தில் குளறுபடி காணப்படுவதாக சொல்லப்படுகிறது இது பற்றி?

**பதில் :-**

பிழை சொல்வது எளிது ஆனால் களத்தில் நின்று வேலை செய்து பார்த்தால் தான் தெரியும் இந்தியாவில் எத்தனையோ பேர் வீதிகளிலும் பாலங்களிலும் குடியிருக்கும் போது நாம் அதனை எல்லாம் விட்டுவிட்டு இங்கு வந்து மக்களுக்கு வீடமைத்து கொடுப்பது மக்களின் அவல நிலையை களைவதற்கே.

அவ்வாறு அந்த விடயத்தில் பாலியல் லஞ்சம் இடம் பெற்றால் அது வருந்தத்தக்கது. ஆனாலும் அவ் விடயத்தைச் செய்தது இங்குள்ள குடிமகன் தானே. அதற்கு நாம் என்ன செய்வது.

**கேள்வி :-**

வடக்கில் றோவின் செயற்பாடு அதிகமாக உள்ளது என குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறதே?

**பதில் :-**

இது உண்மையற்ற தகவலாகும். உண்மையென்றால் தானே நாம் இது பற்றி கவனத்தில்கொள்ளவேண்டும்.

**கேள்வி :-**

வடமாகாண இளைஞர்களின் இன்றைய நிலை குறித்து?

**பதில் :-**

இன்றைய இளைஞர்கள் கெட்டுப்போவதற்கு பிரதான காரணம் வெளிநாட்டுப்பணம் அது தவிர நீங்கள் கேட்டது போன்று வேறு மறைமுக சக்திகளோ வேறு எதுவோ இல்லை.

அவ்வாறு மறைமுக சக்திகள் இளைஞர்களை கெடுக்கின்றனஎன்றால்அவர்களுக்கு புத்தி எங்கே செல்கிறது.

வெளிநாட்டுப்பணம் தான் இளைஞர்களை சோம்பேறியாக்கி வைத்திருக்கிறது. அதேவேளை குடிப்பழக் கத்திற்கும் உள்ளாக்கி வைத்திருக்கிறது.

**கேள்வி :-**

இளைஞர்களுக்கு இறுதியாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில் :-**

30 வருடமாக பாதிக்கப்பட்டு போயிருக்கும் இளைஞர்கள் கெட்ட வழியில் செல்லக் கூடாது நீங்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியா இருக்க வேண்டும்.

நான் திரைப்படம் பார்ப்பதில்லை. சிவாஜி படத்தில் நல்ல பெண்ணை பார்க்க வேண்டும் என்றால் யாழ்ப்பாணம்போகவேண்டும்என்று சொல்வது போல நல்ல பையன்களை பார்க்க வேண்டும் என்றால்யாழ்ப்பாணம்செல்ல வேண்டும் என்று உலகம் சொல்லும் நிலைக்கு இளைஞர்கள் மாற வேண்டும்.


யாழ் புத்தகசாலை

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையான நூல்களையும் பாடசாலை உபகரணங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்...



இல. 305,307,309,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

கனகபுரம் வீதி,
(கனகபுரம் விளையாட்டுக்கழகச் சந்தி)
கனகபுரம், கிளிநொச்சி.

TEL : 021 221 7874 / 077 834 9507




- மதுரன் -

# எங்கள் கதை

காலம் விசித்திரமானது உலகம் விரிவுபட்டது, மரணம் தற்காலிக உறக்கம் போன்றது, மானுட சமூகம் மரணத்தின் முன் மண்டியிடாது திமிறியிட்டெலும் மானுட விலங்குக் கூட்டமாக இன்று வரை பயணித்துக் கொண்டிருக்கிறது.

கால வரலாற்றை தூக்கி மீள்வாசிப்புக்குட்படுத்தினால் அது அமெரிக்காவாக இருக்கட்டும் ஆபிரிக்காவாக இருக்கட்டும்தொடர்ச்சியாக "போராட்டம்", "வெகுண்டெழுதல்" மாத்திரமே குடும்பத்தில் தனி மனித விடுதலையிலும், நாடுகளில் சமூகக் குழுக்களின் விடுதலையிலும் தீர்வைப் பெற்றுத் தருவதாக இருக்கிறது.

இது குடும்பத்திலிருந்து மேற்கிளம்ப வேண்டும். ஒரு பிள்ளை தனக்கு விருப்பமான உணவை தெரிந்தெடுத்து பெற்றுக்கொள்வதிலிருந்து ஆரம்பிக்கிறது.

அது பெண் குழந்தையாகவோ அல்லது ஆண் குழந்தையாகவோ இருக்கட்டும். பின்பு அது வளர்ந்து திருமணம் என்ற வயதை அடைய முற்படும் போது எமது தமிழ் சமூகத்தை பொறுத்தவரையில் திருமணம் அதன்முன்வரும் காதல்ஒரு "பொழுதுபோக்கு" வாழ்க்கைக் கோலமாக மாறி வருவதை எம்மால் காணக் கூடியதாக இருக்கிறது.

முக்கியமாக திருமணம் என்பது எம் சமூகத்தவர்களிடையே விலை பேசும் "சந்தைக்களமாக" மாறியிருக்கிறது என்பது எம் பண்பாட்டுத் தளத்தை தரிசிப்பவர்களுக்கு தெரிந்த விடயம், இங்கு நான் ஏன் இந்தப்பத்தியை இவ்வித பேசுபொருள் பற்றி பேச எத்தனிக்கிறேன் என்றால் அண்மைக் காலங்களில் விவாகரத்து பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது.

அதில் காதல் திருமணம் புரிவோரும் உள்ளடக்கம், அதேவேளை காதலித்த காதலன் ஏமாற்றி பெண் பிள்ளை தூக்குப் போடுதல், விசம் குடித்தல், பையன்கள் ரெயினில் பாய்தல், தண்டவாளத்தில் தலை வைத்தல் போன்ற தற்கொலை முயற்சிகளினால் வட புலத்தில் அருமந்த உயிர்கள் போய்க்கொண்டு தான் இருக்கிறது.

உளவியலாளர்கள், சமூகவியல் வாதிகள், புத்திஜீவிகள் கூட இதில் கவனம் கொண்டதாக தெரியவில்லை.

தொடர்ந்து மரணங்கள், தற்கொலைகள் பற்றி ஊடகங்கள் மூலமும் அறிகிறோம். அவ்வளவு மாத்திரமே பெற்றோர் தமது விருப்பு, வெறுப்புகளுக்குள் உள்நின்று தேர்ந்து சாதி, மதம், கோத்திரம், பணம், அந்தஸ்து என்ற குறுகிய வட்டத்தினுள் நின்று பிள்ளைகளை திருமண கட்டமைவில் தமக்கு விருப்பமான மாப்பிளை, பெண்ணை கட்டிக் கொடுக்கும் நடைமுறையை கைக்கொண்டு வருவது எம் சமூகம் எதிர்கொள்ளும் ஆற்றொனா விடயமாகும்.

ஒரு முறை அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் தனது மனைவியுடன் காரில் சென்று எரிபொருள் நிரப்பிக்கொண்டிருந்தபோது அவரது மனைவி காரைவிட்டு இறங்கி ஒருவருடன் பேசியிருக்கிறார்.

பின்பு அவர் மீளவும் காரில் ஏறும்போது கணவனாகிய முன்னாள் ஜனாதிபதி யாருடன் பேசிவிட்டு வருகிறாய் என்று கேட்கும் போது அப்பொழுது மனைவி அவர் எனது முன்னாள் காதலன் என்று விடை கூற, அப்பொழுது முன்னாள் ஜனாதிபதி சொன்னாராம் நீ அவனை கட்டியிருந்தால் இப்பொழுது ஒரு சாதாரண எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியனின் மனைவியாகியிருப்பாய் என்று அதற்கு பதிலளித்த மனைவி அப்படி என் காதலன் என்னைக் கரம் பிடித்திருந்தால் இப்பொழுது உங்களது கதிரையில் அவன்தான் ஜனாதிபதியாகியிருப்பான் என்றாராம்.

ஆக "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்று சும்மா சொல்லிவிடவில்லை.

இங்கு காதல் என்பது எனது மொழியில் சொல்வதானால் சக வாழ்க்கைப் பயணியை தேடுவது என்பது இப்பத்தியாளரின் புரிதலாகும்.

பெற்றோர் தொடர்ந்து பாரம்பரிய பொதிசெய்யப்பட்ட கையளிப்புச் சிந்தனையை தூக்கியெறிந்து பல்பறிமான சிந்தனை மரபுக்குள் வரவேண்டும்.

இன்றும் நாம் "சீதனக் கலாச்சாரம்" என்ற வரையறைக்குள்இருமனம்இணையும் திருமணத்ததை வைத்திருப்பது எமது சமூகம் இன்னும் வளரவேண்டியிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

ஒத்த கருத்துள்ள பயணிகளை ஒன்றாய் சேர்த்து நாட்டின் நிலைபேண் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வோம்.

ஒரு நாட்டின் மூலவேரானது தனிமனிதனிலிருந்து தான் தொடங்குகிறது. தனிமனிதன் - குடும்பம் - சமூகம் - கிராமம் - நகரம் - மாவட்டம் - மாகாணம் - நாடு என்று தான் வளர்கிறது என்பதை நாம் உய்த்துணரவேண்டும்.

விடுதலை வீட்டிலிருந்து பெறப்பட வேண்டும் அது பின்பு சமூக, இன விடுதலைப் பற்றி சிந்திக்கச் செய்கிறது. மேலே நாடுகளில் எப்பொழுதோ உணரப்பட்ட உண்மையை நாம் இன்னும் உணராமல் விட்டுவிட்டு... இன்றும் வாய்கிழிய கல் தோன்றி மண் தோன்றா காலத்தில் முன்தோன்றிய மூத்த குடி என்பதில் எவ்வித பயனுமில்லை.



# விடிவெள்ளி

எனது உயிர்த் தோழி தமிழ் இசையின் வீட்டுக்கு மிதிவண்டியில் பயணித்துக் கொண்டிருக்கின்றேன்.

பொழுது மாலைப் பொழுதாக இருந்தது. தூரத்தே வானத்திலே காகங்கள் கரைந்து வட்டமிட்டு கத்துகிறது.

கண்ணுக்கு எட்டும் தூரத்தில் பச்சைநெல் தாள்கள் என்னைப் பார்த்து தலையசைக்கின்றன.

இயற்கை எவ்வளவு ரம்மியமாக இருந்தாலும் முந்தி இந்த வீதியால் பயணிப்பவர்களில் பலரைக் காணவில்லை.

புதியவர்கள் நடமாடுகின்றார்கள். அந்த வேப்பமரத்து சந்திக்கு இடதுபுறமாகத் தான் தமிழ் இசையின் வீட்டுக்கு செல்லவேண்டும்.

அம்மா இந்த மரவள்ளித் தடிகளை பின்னுக்கு நடப்போறன்.

ஓம் தமிழ் மழை வரப் போது நட்டுவிடன்.

ஆறு மாதத்தில் மரவள்ளிக் கிழங்குபிடுங்கிடுவம் தமிழ் இசையின் வீட்டுக்குள் இருந்து குரல்கள் கேட்கின்றன.

கிடுகுப்படலையில் நின்ற படி தமிழ் என்று கூப்பிடுகிறேன். ஓம் வாறன். ஓ புகழினி நீண்ட நாளைக்குப் பிறகு உன்னைப் பார்க்கிறன்.

வா உள்ளுக்கு என்னை அழைத்து சென்று அந்த கதிரையில் உட்கார வைத்தாள்.

இதில்காலமை அம்மா அவிச்ச கடலை இருக்கு சாப்பிடு. மண் ஈரமாக் கிடக்கு இந்த அஞ்சாறு மரவெள்ளித் தடியை பின்னுக்கு நட்டுட்டுவாறன்.

ஓம் தமிழ் இந்த ஈரத்தோட வைச்சிட்டாய் எண்டால் இரண்டு மூண்டுநாளேல வேர் வைக்கத் தொடங்கிடும். ஓமடி மரவெள்ளித்தடியை நட்டுட்டுவா நான் இருக்கிறன்.

தமிழ் இசை என்னோட ஒண்டா முல்லைத்தீவு ம.ம வித்தியாலயத்தில் படிச்சவள் கவிதை, சிறுகதை எழுதுகிறதில் நல்ல கெட்டிக்காரி எதையும் கதைக்கின்றபோது நிதானத்துடன் கதைப்பாள்.

மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனோபாவம் கொண்டவள். அவள் நல்லா கிரிக்கெட் விளையாடுவாள்.

நிறைய வெற்றிச் சான்றிதழ் எடுத்திருக்கிறாள். தேசிய அணியில் இடம்பெறவேண்டும் என்பது அவளது கனவாக இருந்தது. மொழி, இனம் பார்த்து புறக்கணிக்கப்படும் போது கவலைப்படுவாள். தனது திறமை வெளிச்சம் பெற வேண்டும் என கடும் பிரயத்தனம் செய்வாள்.

புரட்சிகள் ஒரு போதும் தோற்றுவிக்கப்படுவதில்லை. அடிமைத்தனமும் வளங்கள் சரியாக பகிரப்படாமையினாலும் தான் புரட்சிகள் தோற்றம் பெறுகின்றது என்பதே உலக நியதி என்று சொல்லுவாள்.

பட்டினியான மக்களை அனாதை ஆன சிறுவர்களை பார்த்து இரக்கப்படுவாள் தமிழ் இசை படிக்கிற காலத்திலேயே படிக்கிற மாணவர்களில் வித்தியாசமானவள்.

பள்ளிக்கூட பூந்தோட்டத்துக்கு எண்டு மல்லிகை, செவ்வரத்தை, நித்தியா வட்டை, கனகாம்பரைசெடி எனபூச் செடிகளை தண்ணீர் ஊற்றி வளர்த்தவள். அவளுடைய குடும்பம் கஸ்ரமாக இருந்தாலும் அதைப்பற்றி வெளியில கதைக்கமாட்டாள், எந்த விசயத்தையும் என்னட்டை தான் சொல்லுவாள்.

படிக்கிற காலத்தில அவள் வாசிக்கிற புத்தகங்கள் வித்தியாசமானவை. நோபல் பரிசு பெற்ற பசுமை புரட்சியாளரான வங்காரிமாத்தாயின் வாழ்க்கை வரலாறு, சுபாஸ் சந்திரபோஸ், சேகுவரா போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்று புத்தகங்கள் தமிழ் இசையின் புத்தகப்பையில் இருக்கும். என்னையும் வாசிக்கத் தூண்டுவாள்.

ஏன் தமிழ் இப்பத்தைப் பெடியள் குமுதம், விகடன், என்று படிக்கேக்க நீமட்டும் இப்பியான புத்தகங்கள் எல்லாம் படிக்கிறாய் என்று சொல்லும் போது என்னைப் பார்த்துப் புன்னகைப்பாள். அவள் புன்னகைக்குள் நிறைய அர்த்தங்கள் பொதிந்திருக்கும். அரைமணி நேரத்தின் பின்னர் கிணற்றடியில் கால்களை கழுவிவிட்டு என்னை நோக்கிவந்தாள்.

மன்னிக்கோணும் புகழின் உன்னைத் தனியா விட்டதுக்கு தண்ணீர் கூட தாராம போயிட்டன. இருவாறன் முற்றத்தில் நின்ற இரண்டு கொடித்தோடைகளை பறித்து குடிபானம் செய்துதந்தாள். இதை குடி புகழினி இது எங்கட அப்பா வைச்ச கொடித் தோடை.

சொல்லுகின்றபோது கண்கள் கலங்கின. அதுசரி எங்க உங்கட அப்பா வேலைக்கோ...?

எனது கரங்களை பற்றிப் பிடித்தாள் கண்களில் இருந்து கண்ணீர் மண்ணை நனைத்து அப்பா புதுமாத்தளன்ல கடலுக்கு போயிற்று வாறன் எண்டு போனவர்தான். என்ன நடந்தது எண்டு ஒண்டும் தெரியேல. அப்ப பெரிய சண்டை எல்லாம் நடந்தது தெரியும்தானே.

அப்பாவுக்கு வலிப்பு கூட இருக்கு ஒரு வேளை வலிப்பு வந்து தான் கடலுக்குள் விழுந்தாரோ. இல்லை செல்பட்டுத் தான் செத்தாரோ. யாருக்கு தெரியும் கடவுளுக்கு தான் தெரியும். அப்பா இந்த கொடிதோடையை அண்ணன் நினைவுநாள் அண்டைக்கு முள்ளியவளை சந்தேல இருந்து வாங்கிவந்தவர் அதுதான் இப்படி காய்ச்சு நிக்குது. எவ்வளவு தான் கொடி தோடை காய்களை தந்து நிண்டாலும் எங்கட அண்ணா மாதிரிவருமோ.

தமிழ்இசை செல்லுகின்ற வரிகள் ஒவ்வொன்றுக்கும் ஆழமான அர்த்தங்கள் புதைந்திருந்தன. அவள் வாழ்க்கையில் நிறைய துன்பங்களை அனுபவித்திருக்கிறாள் என்பதை அவளோடு கதைக்கின்றபோது புரிகிறது.

சூரியன் மரங்களுக்கு இடையே ஒழிந்து கொள்கின்றான் வானத்திலே கொக்குகள் இருப்பிடம் திரும்பிக் கொண்டிருக்கின்றன. காலையில் மலர்ந்த அடுக்கு செவ் வரத்தை பூக்கள் வாடுகின்றன. எடி பிள்ள இருட்டுப் படப்போது ஆடுகளை அவிட்டுட்டுவாவன். ஓம் அம்மா வேற என்ன புகழினி உன்னைப் பார்த்தது நிறைந்த சந்தோசம். உண்மையாவே தமிழ்இசை உன்னைச் சந்திச்சது கூட நிறைய மகிழ்ச்சி. கடவுள் உன்னை ஒரு போதும் கைவிடமாட்டார். நீ இன்று நட்டமரவெள்ளி தடி ஆறுமாதத்தில கிழங்கு தரும் என்பது உண்மை. அதே போல தான் எனது மனக் கிடங்கில் இருக்கின்ற கனவுகளும், இலட்சியங்களும் எண்டைக்கோ ஒருநாள் நிறைவேறும், பேந்து ஒரு நாள் சந்திப்பம் நான் போயிற்றுவாறன்.

மிதிவண்டியின் மிதி பலகையை மெல்ல சுழற்றுகின்றேன். வீதியில் வாகனங்கள் நிறைந்திருந்தன. தூரத்தே நாய்கள் ஊளையிட்டு கேட்கிறது. சனநடமாட்டம் குறைந்திருந்தது. போன மாதம் பத்திரிகை படித்த செய்தி பள்ளி மாணவி கற்பழித்து கொலை மனதிலே வந்துபோனது. மிகுந்த பயத்துடன் மிதி பலகை சுழற்சியின் வேகத்தை கூட்டுகின்றேன். தமிழ் இசையை நினைக்கும் போது கவலையாக இருந்தது. எவ்வளவு திறமையானவள் இந்த போரினால் அவள் தன்ர அப்பாவையும் அண்ணாவையும் இழந்து விட்டாள். நினைத்துக் கொண்டு வீட்டுக்குள் மிதிவண்டியை விட்டுட்டு முற்றத்து கதிரையில் அமர்ந்து கொண்டேன்.

வானத்திலே நட்சத்திரங்கள் தென்படத் தொடங்குகின்றன. அம்புலி நடுவானம் நோக்கி மெல்ல நடை பயிலுகின்றாள். தூரத்து ஆலமரத்து கிளையில் நத்து ஒண்டு சத்தமிடுகின்றது. நாய்களின் ஊளையிடல் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறது. பிரதான வீதிகளில் அம்புலன்ஸ் பயணிக்கும் சத்தம் கேட்கிறது. சிலவருடங்களின் பின்னர் அந்த வீதியால் எனது குழந்தையுடன் நடந்து சென்றுகொண்டிருந்தேன்.

வயல்வெளிகள் சோபை இழந்துவிட்டது பனைமரங்கள் தலை இழந்து காட்சியளித்தன.


தமிழ் இசை வீட்டுக்கு செல்லும் சந்தியில் நின்ற வேம்பு அடியோடு பட்டுப் போயிருந்தது.

மின்கம்பத்தில் மைனா ஒன்று சப்திக்கிறது. எதையோ இழந்துவிட்ட சோகத்தில். தமிழ் இசையின் வீடு பற்றைகளால் மூடியிருந்தது. பின்னுக்கு நட்டுவைத்திருந்த மரவெள்ளிகள் எரிந்து போயிருந்தன. அவள் குடியிருந்த வீட்டின் வானத்தில் ஒரு நட்சத்திரம் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது தமிழ்இசை நீ சாகவில்லை அந்த விடி வெள்ளி நீதான் நீ நினைத்த கனவுகளும் இலட்சியங் களும் ஒரு போதும் தோற்பதில்லை. நீ ஒருசமூகப் புரட்சி விடிவெள்ளி

ஆ.முல்லைதிவ்யன்




★ யாழ். மாநகரில் பிரமாண்டமான மண்டபம்.
★ நியாயமான கட்டணங்களுடன் கூடிய தரமான சேவை.
★ எல்லா மதத்தினருக்கும் அவரவர் கலாச்சாரத்திற்கும் விரும்பிய நிறத்துக்கும் ஏற்ற வகையில் மணவறை அலங்காரங்கள்.
★ முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) வசதி.
★ மண்டபத்துடன் இணைந்த ஐஸ்கிறீம் விற்பனை நிலையம்.




37, சேர். பொன் இராமநாதன் வீதி, (நாச்சிமார் கோவிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம். Web : www.saraswathyhall.com | E-mail : saraswathyhall_rajah@live.com

HOT LINES 021 320 7369
077 923 4176







**மழலை அறிமுகம்**

இக் குழந்தை
க.கிந்துஜன்
இவர் செட்டித்தெரு
கின்னர் பாலர்
பாடசாலையில்
பயின்று வருகிறார்
இவர் விளையாட்டு,
படிப்பில் படு சுட்டி

## நீங்களும் எழுதலாம்

வரலாற்றில் முதன்முறையாக இலங்கையில் வெளிவருகின்ற மாதாந்தப் பத்திரிகையான ஈழத்துத்திராவிடம் மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கிறது. தரமான ஆக்கங்கள் இணங்கண்டு பிரசுரிக்கப்படும். மாண வர்கள் கவிதை, குறுங்கதை, ஓவியம், பொது அறிவு போன்ற ஆக்கங்களை அனுப்பிவைக்க முடியும்.

மாணவர்கள் தமது பெயர் முகவரி என்பவற்றோடு கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலோடு ஆக்கங்களை அனுப்பி வைக்க முடியும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :

**பிரதம ஆசிரியர் - ஈழத்து திராவிடம்**
**11/21, அரியாலை, யாழ்ப்பாணம்.**
**076 768 7107**





க.தர்சகன்
யாழ்.மத்திய கல்லூரி
தரம் :- 07

# மாதிரிப் பரீட்சை - 1

## வினாத்தாள் II

ஆசிரியர் வே. அன்பழகன்

நேரம்: 1 மணி 15 நிமிடம்

01. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.

நாம் கல்விச்சுற்றுலா சென்ற வேளை சிகிரியா போயிருந்தோம். தூரத்தில் நின்று பார்த்த போது அது ஒரு பெரிய சிங்கம் போலக் காட்சியளித்தது. அருகிலே சென்ற போது தான் அதன் உண்மையான அமைப்பைக் கண்டு கொண்டோம். இருவர் இருவராக மலையில் ஏறினோம். அக்கோட்டையைச் சுற்றி அழிபாடு அடைந்த நிலையில் அகழிகளும் தென்பட்டன. பல்வேறு அளவிலான படிக்கட்டுகள், மேடைகள், இருக்கைகளாகப் பயன்படுத்தப்பட்ட கற்பாறைகள் என்பவற்றைப் பார்த்தோம்.

1) கோட்டையைச் சுற்றித் தென்பட்டன யாவை? ..............................

2) இருக்கைகளாகப் பயன்படுத்தப்பட்டவை யாவை? ..............................

3) "தொலைவில்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..............................

4) "பொய்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ..............................

5) இங்கு இடம்பெற்றுள்ள உவமானத்தை எழுதுக. ..............................

6) பெயரடை மொழி ஒன்றினை எழுதுக. ..............................

7) தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் யாது? ..............................

02. தனிச்சொல்லை எழுதுக.

1) எழுபத்தைந்து ஆண்டு நிறைவிலே எடுக்கப்படும் விழா ..............................

2) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன ..............................

03. குறியீடு இடுக.

1) தலைவா வருக வருக

2) திடீரென உதவி உதவி என்று கூக்குரல் கேட்டது

04. சரியான சொல்லை எழுதுக.

1) தீவாளி :-.............................. 2) எண்ணை :-..............................

05. அடைப்பில் உள்ள எழுத்துக்களில் பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து சொற்களைப் பூர்த்தி செய்க. (ல், ள், ழ், ன, ண, ந)

1) திரும..........ம் 2) ஆ.........ந்தம் 3) பிறந்தநா......... 4) மலரித.........

06. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1) வானத்தில் / கிளிகள் / பச்சைக் / பறந்தன / கூட்டமாகப்

..............................

2) நடத்தல் / அறிவுரைகளைக் / ஆசிரியர்களின் / வேண்டும் / கேட்டு

..............................

07. பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் எழுதுக.

இரை { 1) பெயர் :-..............................
2) வினை :-.............................. }

08. ஆண், பெண் மரபுப் பெயரை எழுதுக.

| | ஆண் | பெண் |
|---|---|---|
| 1) யானை | .............. | .............. |
| 2) குதிரை | .............. | .............. |



09. தமிழ்க் கருத்தை எழுதுக.

1) ஒயாகே நமகொஹேத? ..............................

2) பொத்த தென்ன ..............................

10. சிங்கள சொல்லை தமிழ் உச்சரிப்பில் எழுதுக.

1) பாற்சோறு :-.............................. 2) விலை யாது? :-..............................

11. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1) We buy .............................. from the post office. (bags, stamps, pencils, book)

12. ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1) கிளி :-.............................. 2) இரவு :-..............................

3) நிறம் :-.............................. 4) வைத்தியர் :-..............................

13. தமிழ்க்கருத்தை எழுதுக.

1) Monkey :-.............................. 2) Flowers :-..............................

3) May I come in? :-..............................

14. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1) தேசியக் கொடியில் பச்சை நிறம் யாரைப் பிரதிபலிக்கும்?
1) தமிழர் 2) சிங்களவர் 3) முஸ்லீம் 4) பறங்கியர்

2) பின்வரும் பூக்களிலே அதிக நறுமணம் வீசும் பூ எது?
1) நந்தியாவட்டை 2) செவ்வந்தி 3) செவ்வரத்தை 4) பப்பாசி

3) பயிர்களுக்குத் தீங்கு பயக்கும் பிராணி எது?
1) தேனீ 2) ஈசல் 3) நத்தை 4) வண்ணாத்துப்பூச்சி

4) இந்தியா அமைந்திருப்பது இலங்கைக்கு,
1) வடக்கே 2) தெற்கே 3) மேற்கே 4) கிழக்கே

5) விரைவாக முளைக்கும் வித்து ஒன்று,
1) தேங்காய் 2) பனை 3) பயறு 4) புளி

6) இலங்கையின் தலைநகரம்,
1) அநுராதபுரம் 2) நுவரெலியா 3) ஸ்ரீ ஜயவர்த்தனபுரம் 4) காலி

7) தேசப்படங்களில் பிரதான வீதிகளைக் காட்டப் பயன்படுத்தப்படும் வர்ணம்,
1) கறுப்பு 2) சிவப்பு 3) கபிலம் 4) பச்சை

8) நீரில் வளரும் ஒரு தாவரம்,
1) கற்றாளை 2) நாகதாளி 3) ஐதரில்லா 4) இஞ்சி

9) நத்தையின் முட்டை,
1) வெள்ளை நிறமாகும். 2) மஞ்சள் நிறமாகும். 3) சிவப்பு நிறமாகும். 4) கறுப்பு நிறமாகும்.

10) "சிக்குன்குன்யா" நோய் பரவுவது,
1) கோழிகளால் 2) எலிகளால் 3) நுளம்புகளினால் 4) வீட்டு ஈக்களினால்

11) நீரில் முட்டையிடும் பிராணி,
1) தவளை 2) ஓணான் 3) பல்லி 4) வண்ணாத்துப்பூச்சி

12) இலங்கையின் தேசிய மலர்,
1) சூரியகாந்தி 2) நாகமலர் 3) கடுபுல் மலர் 4) நீலோற்பலம் மலர்

13) இலங்கையின் மிக நீளமான நதி,
1) களு கங்கை 2) மகாவலி கங்கை 3) வளவ கங்கை 4) களனி கங்கை

14)  இப்பாதத்தையுடைய பறவை,
1) வாத்து 2) கோழி 3) கழுகு 4) காகம்

15) பின்வருவனவற்றில் இலங்கைக்கே உரித்தான பறவை,
1) மயில் 2) கொக்கு 3) நாகணவாய் 4) பென்குயின்

16) சமாதானத்தின் சின்னம் எது?

1) வெள்ளை அன்னம் 2) வெண்புறா 3) சிங்கம்4 )
வெள்ளைக்கொடி

17) இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்,
1) திரு. சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா 2) கலாசூரி. ஆனந்த சமரகோன்
3) திரு. டபிள்யூ. டீ. அமரதேவ 4) திரு. மொஹிதீன் பேக்

18) இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்,
1) கலாசூரி. ஆனந்த சமரக்கோன் 2) முது தமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி
3) C.W.W. கன்னங்கரா 4) சேர். பொன். அருணாச்சலம்

19) மூலவர்ணங்கள் மூன்றும் முறையே,
1) நீலம், சிவப்பு, மஞ்சள் 2) கறுப்பு, வெள்ளை, சிவப்பு
3) பச்சை, மஞ்சள், ஊதா 4) காவி, செம்மஞ்சள், கறுப்பு

20) இலங்கையின் தேசியக் கொடியைச் சுற்றி இருப்பது,
1) சிவப்பு நிறக்கீலம் 2) மஞ்சள் நிறக்கீலம்
3) பச்சை நிறக்கீலம் 4) செம்மஞ்சள்

**15. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1) தேசிய இலச்சினையில் உள்ள நெற்கதிரால் குறிக்கப்படுவது யாது? ..............................

2) சுவர் ஒன்றைக் கட்டும் போது அதன் நிலைக்குத்தியல்பைப் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் யாது? ..............................


3) சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படும் தினம் யாது? ..............................

4) திருகோணமலைக்கு அண்மையில் கடலுடன் கலக்கும் நதி எது? ..............................

5) ஒருவர் நன்னடத்தைச் சான்றிதழ் பெறச் செல்ல வேண்டிய இடம் எது? ..............................

**16. கணித்து விடை எழுதுக.**

1) ஒரு குழுவில் உள்ள மாணவர்களிடமிருந்து அவர்கள் மிகவும் விரும்பும் பழங்கள் பற்றிக் கேட்கப்பட்டு, அத்தகவல்கள் குறிக்கப்பட்டன.




i) மாம்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது? ..............................

ii) கொய்யாப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க எத்தனை மாணவர்கள் பப்பாசிப்பழத்தைக் கூடுதலாக விரும்புகின்றனர்? ..............................

iii) 35 மாணவர்கள் அன்னாசிப்பழத்தை விரும்பினர். அதனை வரைபின் உரிய நிரலில் குறித்து நிழற்றுக.

iv) மாணவர்கள் அதிகம் விரும்பாத பழம் எது? ..............................

v) இந்த ஐந்து வகைப் பழங்களையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

2) ரூபாய் 25.00 விலையுள்ள ஒரு வரைதற் புத்தகத்தையும், ரூபாய் 15.50 விலையுள்ள வர்ணப் பெட்டியையும் வாங்கி நூறு ரூபாய்த் தாள் ஒன்றினைக் கொடுக்கும் போது கிடைக்கும் மீதி யாது?

..................ரூபாய்..................சதம்

3) ஒவ்வொன்றும் 750 $ml$ கொள்ளளவு உள்ள ஆறு போத்தல்களில் உள்ள பானம் வேறொரு பாத்திரத்தில் இடப்பட்டது. பாத்திரத்திலுள்ள பானத்தின் மொத்தக் கனவளவு லீற்றரிலும் மில்லிலீற்றரிலும் யாது?

..................$l$..................$ml$

4) 1 $kg$ அவரையின் விலை ரூபாய் 20.00 ஆகும். 1 $kg$ 250 $g$ அவரைக்காகச் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

..................ரூபாய்..................சதம்

5) பெருக்கல் "*" குறியீட்டினாலும், வகுத்தல் "/" குறியீட்டினாலும் காட்டப்படும் எனின், 9* 4/2 இன் பெறுமானம் யாது?

..............................



அப்பியாசப் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

7) ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் 7007 சட்டைகள் இருந்தன. அவற்றில் 5872 சட்டைகள் விற்கப்பட்டன. எனின் மீதியாக இருந்த சட்டைகள் எத்தனை?

..............................

8) நாடா ஒன்றின் நீளம் 3 $m$ இலும் 12 $cm$ குறைவாகும் எனின் நாடாவின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர்?

.............................. $cm$

9) ஒரு வகுப்பறையில் 4 கதிரைகள் வீதம் உள்ள 12 நிரைகளும் 3 கதிரைகள் வீதம் உள்ள 6 நிரைகளும் உள்ளன. அந்நிரைகளில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

..............................

10) 2010 ஆம் ஆண்டில் 50 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் திரு. மோகன் தமது 35 ஆவது பிறந்த தினத்தை எந்த ஆண்டில் கொண்டாடினார்?


..............................

11) ஐந்து நண்பர்கள் தம்மிடமுள்ள பணத்தைச் சமமாக இட்டு ஒன்று ரூபாய் 30.00 வீதம் 8 தோடம் பழங்களையும் ஒன்று ரூபாய் 50.00 வீதம் 6 அப்பிள் பழங்களையும் வாங்கினர்.

i) அப்பிள் பழங்களையும் தோடம்பழங்களையும் வாங்கத் தேவைப்படும் மொத்தப் பணம் எவ்வளவு?

..................ரூபாய்..................சதம்

ii) ஒவ்வொரு நண்பனும் இட்ட பணம் எவ்வளவு? ..................ரூபாய்..................சதம்




12) உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 10 $m$ ஆகும். பக்கம் AB இன் நீளம் 2 $m$ 50 $cm$ ஆகும். பக்கம் BC இன் நீளம் 4 $m$ 80 $cm$ உம் ஆகும். பக்கம் AC இன் நீளம் யாது?

.................. $m$.................. $cm$

13) 1500 $ml$ கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 800 $ml$ நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 900 $ml$ நீரைக் கவனமாக ஊற்றும்போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது?

.............................. $ml$

14) வெற்றிடங்களை நிரப்புக.

| | $kg$ | $g$ |
|---|---|---|
| | 1 $kg$ | 750 $g$ |
| + | 2 $kg$ | 500 $g$ |
| | ........ $kg$ | ........ $g$ |

15) இருபதாயிரத்து நாற்பத்தைந்து என்பதை இலக்கங்களில் எழுதுக. ..............................

16) 3 6 2 1 இந்த நான்கு இலக்கங்களையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப்பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

..............................

**17. "நாம் சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம்" பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.**

1) ..............................

2) ..............................

3) ..............................

# உருவாகிறார் - சே





குறித்த ஆய்வுகளையும் அவர் மேற்கொண்டார். விவசாயிகளிடம் குவேதமாலா அரசு, ஆயுதங்களைக் கொடுத்துப் போராட்டத்தில் ஈடுபடச் செய்திருந்தால் அமெரிக்காவின் சதியை முறியடித்திருக்கலாம் எனும் பார்வையில், 'சே' கட்டுரைகள் எழுதினார். இதனால் சி.ஐ.ஏவின் பார்வைக்கு இலக்கானார். பாதுகாப்புக்காக அர்ஜென்டினா தூதரகத்தில் தங்கநேரிட்டது.

இச்சமயத்தில், அவரது எண்ணங்களால் ஒரு கியூபா போராளி வசீகரிக்கப்பட்டார். அவர் பெயர் நிக்கோ லோபஸ். கியூபாவின் ஜனாதிபதியாக இருந்த பாடிஸ்ட்டாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக ஃபிடல் காஸ்ட்ரோவின் தலைமையில் ஒரு புரட்சி ஏற்படுத்திய 'ஜூலை 26' எனும் இயக்கம் அப்போது தான் தோல்வியைச் சந்தித்திருந்தது.

1953ம் ஆண்டு இதே நாள் கியூபாவில் கொடுங்கோல் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த பாடிஸ்டா தலைமை யிலான அரசைத் தூக்கி எறிவதற்காக புரட்சிக்குத் தேவையான ஆயுதங்களைப் பெறுவதற்காக பிடல் அவரது சகோதரர் ரால் காஸ்ட்ரோ உள்ளிட்ட 120 வீரர்கள் சாண்டியாகோ கியூபாவில் அமைந்திருந்த மொன்காடா இராணுவத் தளத்தை தாக்குவதற்கு திட்டம் தீட்டினர்.

1953ம் ஆண்டு ஜூலை 26 அதிகாலை 6.00 மணி பிடல் அவரது சகோதரர் ரால் காஸ்ட்ரோ உள்ளிட்ட 120 வீரர்கள் சாண்டியாகோ கியூபாவில் அமைந்திருந்த கியூபாவின் இரண்டாவது மிகப் பெரிய இராணுவத் தளத்தை தாக்குகின்றனர்.

அச்சமயம் பாடிஸ்டா கட்டளைத்தளபதியாக கடமையாற்றிய தருணம் தளத்தில் 400 க்கும் மேற்பட்ட வீரர்கள் இருந்தனர்.

பிடலினுடைய திட்டம் என்னவென்றால் அபெல் சண்டமரிய தலைமையிலான 20 வீரர்கள் அடங்கிய முதலாவது குழு இராணுவத் தளத்திற்கு முன்பாக அமைந்திருக்கும் வைத்திய சாலையைக் கைப்பற்றுவது, லெஸ்டர் தலைமையிலான 5 வீரர்கள் அடங்கிய இரண்டாவது குழு என்னும் கட்டிடத்தைக் கைப்பற்றுவது,பிடல் தலைமையிலான 90 பேர் அடங்கிய மூன்றாவது குழு தளத்தைத் தாக்கி தொலைத் தொடர்பு நிலையத்தைக் கைப்பற்றுவது என்பதாகும்.

மொன்கடாவை முற்றுகையிட அவன் தலைமையில் 1953 ஜூலை 26 அன்று சியோனிப் பண்ணையிலிருந்து புரட்சிப் படை புறப்பட்டது. தாக்குதல் ஆரம்பிக்கின்றது ஆயுதங்கள் தாங்கி வந்த வாகனம் தாக்குதலுக்கு இலக்ககின்றது ஆயுத பற்றாக்குறையினால் கெரில்லா வீரர்கள் பலர் பின்வாங்குகின்றனர்.

பிடல் இழைத்த ஒரு சிறிய தவறினால் அவரின் வாகனம் சிறிய விபத்துக்குள்ளகின்றது அவரைக் காப்பாற்ற கெரில்லா வீரர் ஒருவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற் கொள்ள பிடல் தனது வாகனத்தை இராணு வத்தளத்தின் வாசலை நோக்கி செலுத்திக் கொண்டிருந்தார். ஆனால் வாகனத்தின் பின்னால் இருந்த வீரர்கள் தாக்குதல் ஆரம்பித்து விட்டதால் தாம் இராணுவத்தளத்தின் உள்ளே இருக்கின்றோம் என நினைத்து வெளியே குதிக்கின்றனர் இதனால் அபாய மணி ஒழிக்க பாடிஸ்டாவின் இராணுவம் சுதாரித்துக் கொள்கின்றது.

தாக்குதல் முடிவில் 15 கெரில்லா வீரர்களும் 3 இராணுவத்தினரும் கொள்ளப்பட 23 கெரில்லா வீரர்களும் 5 இராணுவத்தினரும் காயமடைகின்றனர். எஞ்சிய வீரர்கள் பிடல் மற்றும் அவரது தம்பி ரால் காஸ்ட்ரோ உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டு தீவுச்சிறையில் அடைக்கப்பட்டனர் அவர்களில் 56 கெரில்லாக்கள் கொலையும் செய்யப்படு கின்றனர். பதினைந்து ஆண்டு கால சிறை வாழ்க்கை என தீர்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் மக்கள் புரட்சியின் விளைவாக பிடல் பொது மன்னிப்பின் பெயரில் விடுதலை ஆகின்றார்.

நிக்கோலோபஸ்க்கு, குவேத மாலாவில் 'சே'வைச் சந்தித்தபோது புத்துணர்ச்சி ஏற்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க சில யோசனைகள் அவரது எண்ணத்தில் பளிச்சிட்டன. சித்தாந்தங்களில் தேர்ச்சி பெற்றிருந்த சே குவேரா மட்டும் கியூபா புரட்சியில் பங்கெடுத்தால், போராட்டத்துக்கு ஒரு புது வடிவம் கிடைக்கும் என்று லோபஸ் நம்பினார். இது குறித்து காஸ்ட்ரோவின் சகோதரர் ரால் காஸ்ட்ரோவுடன் பேசினார்.

இரண்டு மகத்தான சக்திகள் இணைந்த தருணம் கியூபா வளர்ச்சி யின் அத்திவாரம். அப்போது 'சே'வுக்கு வயது 27. காஸ்ட்ரோவுக்கு 32. காஸ்ட்ரோவுக்காவது கியூபா தன் சொந்த நாடு. போராடிய வேண்டிய அவசியம் இயல்பானது. ஆனால் 'சே'வுக்கு அப்படி அல்ல. தனக்கு முற்றிலும் தொடர்பற்ற மற்றொரு தேசத்தில், அம்மக்களின் விடுதலைக்காகத் தன் உயிரைப் பணயம் வைத்து ஆயுதம் எடுப்பதென்பது, உலக வரலாற்றில் எப்போதும் எங்கும் நிகழ்ந்திராத ஒன்று. இதனால்தான் 'சே' மனிதருள் மாமனிதராக அடையாளம் காணப்பட்டார்.

புரட்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. ஏறக்குறைய ஒன்றரை வருட கடுமையான ஆயுதப் பயிற்சிக்குப் பிறகு 1956, நவம்பர் 26ம் தேதி இரவு மெக்ஸிகோ கடற்கரையில், 82 போராளிகள் ஒருவர் பின் ஒருவராக ஏறிக் கொண்டபின், விடுதலையின் பாடலை முழங்கியபடி, கிரான்மா எனும் படகு கியூபாவை நோக்கிப் பயணித்தது.

*(தொடரும்)*

# திரைவிலகும் இரகசியம்

உங்களை மகிழ்விக்காத ஏதோ ஒன்றைப் பற்றி நீங்கள் சிந்திக்கத்துவங்கி, அதைப் பற்றி அதிகமாக எண்ண எண்ண அது மேலும் மோசமடைந்த சம்பவங்கள் உங்களுக்கு எப்போதாவது நிகழ்ந்துள்ளதா? நீங்கள் நீடித்திருக்கும் ஓர் எண்ணத்தை எண்ணும்போது, ஈர்ப்பு விதி நீடித்திருக்கும் ஓர் எண்ணத்தை எண்ணும்போது, ஈர்ப்பு விதி உடனடியாக அதை ஒத்த எண்ணங்களை உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பது தான் அதற்குக் காரணம். ஒரு சில நிமிடங்களுக்குள்ளேயே ஏராளமான மகிழ்ச்சியற்ற ஒத்த எண்ணங்கள் உங்களை நோக்கிப் படையெடுப்பதால் நிலைமை மோசமடைந்வது போலத்தோன்றுகிறது. அதைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கும் போது, நீங்கள் மேலும் அதிகமாக மனக்கலக்கம் அடைகிறீர்கள்.

ஒரு பாட்டை கேட்டுக் கொண்டிருக்கும்போது அதை ஒத்த எண்ணங்கள் உங்களை நோக்கிப் படையெடுப்பதை நீங்கள் அனுபவித்திருக்கக்கூடும். பின்னர் அப்பாடலை உங்கள் மனத்திலிருந்து கீழே இறக்கி வைக்க முடியாமல் நீங்கள் தவித்திருக்கலாம்.

அப்பாடலைக்கேட்டுக்கொண்டிருந்த போது உங்களை அறியாமலேயே நீங்கள் அதில் முழுக்கவனம் செலுத்தி,




உங்கள் எண்ணத்தை அதில் ஒருமுகப்படுத்திருயிந்துதான் அதற்குக் காரணம். அப்படிச் செய்ததன் மூலம் நீங்கள் அதை ஒத்த உண்ணாங்களைச் சக்தியுடன் ஈர்த்திருக்கிறீர்கள். அதனால் ஈர்ப்பு விதி உடனே களத்தில் குதித்து அப்பாடல் குறித்த அதிகமான சிந்தனைகளை உங்களுக்கு அள்ளிக்கொடுத்தது.

**ஜான் அஸரப்**

மனிதர்கள் என்ற முறையில் நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமக்கு என்ன வேண்டுமோ அது குறித்த எண்ணங்களை நம் மனத்தில் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிப்பதோடு, அவை குறித்த முழுத்தெளிவையும் நம் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான். அப்படிச் செய்யும் போது, பிரபஞ்சத்தின் சிறந்த நியதிகளின் ஒன்றை நாம் வழிபட்டு வரவழைக்கிறோம். அது தான் ஈர்ப்பு வதி. நீங்கள் எதைக் குறித்து அதிகமாகச் சிந்திக்கிறீர்களோ அதுவாகவே ஆகிவிடுவர்கள். நீங்கள் நினைப்பது எதுவோ அதை உங்களை நோக்கிக் கவர்ந்திழுப்பீர்கள்.

இன்றைய உங்கள் வாழ்க்கை, உங்களது கால எண்ணங்களின் பிரதிபலிப்பே. அதில் நீங்கள் சிறந்தவை என்று கருதுபவையும் அப்படிக் கருதாதவையும் அடங்கும். நீங்கள் அதிகமாக யோசிக்கும் விஷயங்கையே உங்கள் பால் ஈர்ப்பதால், உங்கள் வாழ்வின் ஒவ்வோர் அம்சத்திலும் எந்த எண்ணம் ஆக்கிரமிப்பாக இருந்து வந்துள்ளது என்பதைக் கண்டு கொள்வது மிகவும் எளிது. ஏனெனில், அவற்றைத் தான் நீங்கள் அனுபவித்து வந்துள்ளீர்கள்.

இதுவரை அப்படித் தான் இருந்து வந்துள்ளது. ஆனால் இப்போது இரகசியத்தை நீங்கள் கற்றுக் கொண்டு வருவதால், அதன் உதவியுடன் எல்லாவற்றையும் உங்களால் மாற்ற முடியும்.

**பாப் பிராக்டர்**

உங்கள் மனக் கண்ணில் ஒன்றை உங்களால் பார்க்க முடிந்தால், அது கண்டிப்பாக உங்கள் கைகளில் தவழும்.

ஆற்றல் மக்க இவ்விதியின் மூலமாக, உங்கள் வாழக்கையில் எண்ணங்கள் பௌதீகப் பொருட்களாகப் பரிணமிக்கப் போகின்றன என்று உங்களுக்கு நீங்களே பலமுறை சொல்லிக் கொள்ளுங்கள். அது உங்களது ஆழ்மனத்தில் இறங்கட்டும். பின் உங்களது எண்ணங்கள் பொருட்களாக மாறிவடும்!

*(தொடரும்)*

# அரசியல் வாதிகளால் புறக்கணிக்கப்பட்டுவரும் தங்கநகர் கிராமம் எப்போது விடிவுகாணும்?



**திருகோணமலை நிருபர் அ.அச்சுதன்**

குட்டி யாழ்ப்பாணம் என பெயர் பெற்ற தங்கநகர் கிராமம் இன்று பல்வேறு அடிப்படை வசதிகளின்றி புறக்கணிக்கப்பட்ட பகுதியாக விளங்குகின்றது என அக்கிராமத்தின் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் மகாலிங்கம் சந்திரசேகரம் தெரிவித்தார். அக்கிராமத்திற்கு நேரடி விஜயம் மேற்கொண்டபோது அவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 9 ஆம் களனி என குறிப்பிடப்படும் தங்கநகர் கிராமத்தில் கடந்த இருபதுவருடங்களுக்குமுன் அமைக்கப்பட்ட வீதிகள் குன்றும் குழியுமாக விளங்குகின்றது. மின் இணைப்புக்கள், குடிநீர் வசதிகள் கூட இருபது வருடங்களுக்குமுன் அமைக்கப்பட்ட நிலையிலேயே விளங்குகின்றது.

திருகோணமலை மாவட்ட முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்களின் பார்வையில் தான் இக்கிராமம் அபிவிருத்தி கண்டது.

அதன் பின் எந்தவொரு அரசியல் வாதிகளும் இக்கிராமத்தின் அபிவிருத்தியில் அக்கறைகாட்டவில்லை. தமிழனுக்கு என்று பாடுபட்டவர் திருகோணமலை மண்ணில் தங்கத்துரை என்ற அரசியல்வாதிதான்.

இன்று தேர்தல் காலத்தில் மட்டும் எமது அரசியல்வாதிகள் வந்து செல்கின்றார்கள். அதற்குப்பிறகு அவர்களை எமது கிராமத்தில் காணமுடிவதில்லை என சந்திரசேகரம் கவலையுடன் குறிப்பிட்டார்.

1950 ஆம் ஆண்டளவில் குளனித் திட்டத்தின் கீழ் தம் பலகாமத்திலிருந்து இப்பகுதியில் தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டு இருக்கிறார்கள்.

இக்கிராமத்திற்கு அருகாமையில் சாளியபுர என்ற சிங்களகிராமமும், பத்தாம் கௌனி என்ற முஸ்லிம் கிராமமும் காணப்படுகின்றது. அக்கிராமங்கள் அபிவிருத்தி அடைந்த அளவுக்கு இக்கிராமம் அபிவிருத்தி காணவில்லை என்பதை நேரடியாக பார்க்க முடிந்தது.

இதற்குக் காரணம் அரசியல் வாதிகளின் புறக்கணிப்பாகவே பார்க்க முடிகின்றது.

23 வருடங்களாக தங்கநகரில் இயங்கிவரும் சிவ சித்திவிநாயகர் பாலர் பாடசாலை மிண்ணிணைப்பின்றி, குடிநீர் வசதியின்றி இயங்கி வருகின்றது. 1986 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது இக்கிராமத்தில் 21 பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 1988 ஆம் ஆண்டு, 1990 ஆம் ஆண்டு, 1996 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இடம்பெற்ற இனக் கலவரங்களின் போது இக்கிராமம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. 2005 ஆம் ஆண்டு இக்கிராமத்திலிருந்து சுமார் 50 குடும்பங்கள் வன்னிக்கு இடம் பெயர்ந்து இருக்கின்றார்கள் அவர்களில் 13 குடும்பங்கள் 2009 ஆம் ஆண்டு மீண்டும் இப்பகுதியில் மீளக் குடியேறி இருக்கின்றார்கள், அவர்களுக்கு கூட அடிப்படைவசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.

வன்னியிலிருந்து மீளக் குடியேறிய 13 குடும்பத்தில் மூன்று குடும்பத்திற்கு மட்டும் ஒருலட்சம் ரூபாய் வீதம் குறைந்தவட்டி அடிப்படையில் வீடுகட்டுவதற்கு வழங்கப்பட்டுஇருப்பதாகவும்ஏனையவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.


மீள்குடியேறிய 13 குடும்பங்களில் முகுந்தன் றூபா என்ற குடும்பமும் அடங்குகின்றது. இவ்விடயம் பற்றி றூபா கருத்து தெரிவிக்கையில்,

2005 ஆம் ஆண்டு எமது கிராமத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து வன்னிக்கு இடம்பெயர்ந்து 2009 ஆம் ஆண்டு மீளவும் எமது கிராமத்தில் குடியேறி இருக்கின்றோம். எனது கணவர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்று இருக்கிறார். அவர் அனுப்பும் பணத்தில் வீடுகட்டிகொண்டு இருக்கின்றேன். நான் தையல் நிலையம் ஒன்றில் 5 வருடங்களாக வேலை செய்கின்றேன்.

இவற்றை காரணங்காட்டி அரசினால் வழங்கப்படும் எவ்வித உதவிகளும் எனக்கு கிடைக்கவில்லை. சம்மந்தப்பட்ட அரச அதிகாரிகளிடம் கதைத்தபோது, உங்களது கணவர் வெளிநாட்டில் இருப்பதாலும், நீங்கள் வேலை செய்வதாலும் எவ்வித உதவிகளும் எங்களால் மேற்கொள்ள முடியாது என கை விரிக்கின்றார்கள்.

யுத்தத்தால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தும்





அரசினால் வழங்கப்படும் எவ்வித உதவிகளும் எமக்கு கிடைக்கவில்லை ஏன் இந்த நிலை எமக்கு என அப் பெண் கேள்வி எழுப்பினார்.


இது இவ்வாறு இருக்க, இக்கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்த முடியாத அளவுகுன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

சித்திவிநாயகர் வீதி, அம்மன் கோயில் வீதி என்பன கடந்த 20 வருடங்களுக்கு மேல் திருத்தப்படாமல் காட்சியளிக்கின்றது. மழைகாலங்களில் இக்கிராமம் வெள்ளத்தில் மூழ்கிவிடுகின்றது. ஒழுங்கானவடிகான் அமைப்புக்கள் ஏற்படுத்தப்படவில்லை. இவ்விடயங்கள் சம்மந்தமாக இக்கிராமத்தில் இயங்கும் கிராம அமைப்புக்கள், உயர் அரச அதிகாரிகளுக்கு தெரிவித்தும் இக்கிராமம் மீது அவர்கள் கவனம் எடுக்கவில்லை என கிராம மக்கள் மிகவும் கவலையுடன் தெரிவித்தனர். தற்போது இக்கிராமத்தில் சுமார் 125 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

விக்னேஸ்வர வித்தியாலயம் இக்கிராமத்தின் கல்வியின் ஊற்றுக்கண் ஆகும். க.பொ.த.சா/த வரை இங்கு மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இம் முறை இவ் வித்தியாலயத்திலிருந்து சாதாரண தரத்திற்கு 13 மாணவர்கள் பரீட்சை எழுதியதில் 6 பேர் சித்திபெற்றிருக்கின்றார்கள். தம்பலகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட இப் பாடசாலை பல்வேறு அடிப்படை வசதிகளின்றி இயங்குகின்றது. 1-ம் தரத்திற்கும், 2-ம் தர மாணவர்களுக்கும் ஒரு ஆசிரியர்தான் கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆசிரியர் பற்றாக்குறை இப் பாடசாலையில் காணப்படுவதை இவ்விடயம் வெளிப்படுத்துகின்றது.

இப்பாடசாலைக்கு இதுவரை சுற்றுமதில் அமைக்கப்படவில்லை. பாடசாலைக்கென மேலும் கட்டடவசதிகள் அமைக்கப்பட வேண்டியதேவைகாணப்படுகின்றது. விளையாட்டுமைதானம் இப்பாடசாலைக்கு அமைக்கப்பட வேண்டியதேவை இருக்கின்றது. இது போன்று, பல்வேறு குறைபாடுகளை சுமந்த வண்ணம் இக்கிராமம் காட்சி தருகின்றது. எப்போது இக்கிராமத்திற்கு விடிவுகிடைக்கும் எனமக்கள் ஏங்குகின்றனர்.





வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை சீர் திரு சல்லி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தின் தீர்த்தோற்சவ திருவிழா அண்மையில் இடம் பெற்றது. அம்பாள் எழுந்தருளியுள்ளதையும் சமுத்திரத்தில் தீர்த்தமாடுவதையும் காணலாம்

*படங்கள்-சேனையூர் நிருபர்.*

பெண்களாலேயே பெண்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

KIRUBAA LEARNERS

KIRUBAA LEARNERS | Government Approved Driving Trainning School

கிருபா லேணர்ஸ் | அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை




- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
- தவணைமுறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி
- இரவு நேர வாகனப்பயிற்சி 6.00p.m - 9.00p.m

தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 021 492 3200 / 077 722 5292

யாழ்ப்பாணம் :
- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201 071 454 6958
- விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி. 021 300 6550 071 454 6957
- இல. 227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (மதவடி அண்மையில்) 021 224 2022 071 454 6956
- கண்டி வீதி, சாவகச்சேரி. (பேருந்து நிலையம் அண்மையில்) 021 492 3202 021 227 0700

கிளிநொச்சி :
- A9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505 071 454 6955
- புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515 071 454 6955
- வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818 071 454 6955
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544 071 454 6955

மன்னார் :
இல. 94, பிரதான வீதி, மன்னார். 071 988 7699 077 847 2732

வவுனியா :
216, A9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்) 021 222 7777 071 454 6953

# எதற்கு...

(02ஆம் பக்க தொடர்ச்சி)
வதிலும் கவனம் செலுத்தும் விஜயங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமே உறங்கிப் போயிருந்த சீன-இலங்கை உறவை புதுப்பிக்கவும் கைவிடப்பட்ட துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தை மீள ஆரம்பிக்கவும் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு விஜயம் செய்தார்.

அதன்பிரகாரம் மீண்டும் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித்திட்டத்தை ஆரம்பிக்க சீனா இணங்கியதும் அதற்கான பூர்வாங்க வேலைகளை மேற்கொள்ளவும் ஆரம்பித்தது.

அதனுடன் இலங்கை மீது கோரிய நஷ்ட ஈட்டினை கைவிட்டதுடன் இந்தியக் கம்பனிகளுக்கு கொழும்பு துறைமுக அபிவிருத்தியில் பங்குகொடுக்கவும்திட்டமிட்டது.

இதனால்அச்சமும்நெருக்கடியும் எதிர்கொண்ட மேற்குலகம் அதற்கான பதிலீட்டைக் கண்டறிந்து பரிகாரம் காணவே ஜி7 இல் இலங்கை ஜனாதிபதியை அழைத்து மிகப்பெரிய அங்கீகாரத்தையும் கௌரவத்தையும் வழங்கியது.

ஜப்பான் என்பது இப்போது அமெரிக்காவின் குடும்பத்தின் மிக முக்கிய நண்பன் அல்லது குடும்ப அங்கம் என்றே கூறலாம். அப்படியான ஒரு நாட்டில் இலங்கையை அழைத்து கௌரவப்படுத்துவது மிக மகிழ்ச்சியான ஒன்றாகவே உள்ளது என மேற்கு கருதியது.

அது மட்டுமன்றி வளர்ச்சியடைந்த நாடுகளின் மூலம் இலங்கை பொருளாதார உதவியை பெறவாய்ப்புள்ளது என்பதையும் ஜப்பான் 2010 வரை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பட்டியலில் முதல் நாடு என்பதையும் சான்பிரன்சிஸ் கோவில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1954 இல் ஜப்பானுக்காக பரிந்து பேசிய உரையாடலின் உறவின் பலத்தையும் கருத்தில் கொண்டே ஜப்பானில் நிகழ்ந்த ஜி7 இல் இலங்கை ஜனாதிபதி அழைக்கப்பட்டார்.

இன்றைய உலகம் மென் அதிகாரப் போட்டியினால் ஆனது. அத்தகைய மென்னதிகாரத்தை பிரயோகிக்கும் நாடுகளின் பட்டியலில் சீனா, அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் என்று அதன் பட்டியல் காணப்படுகிறது.

அதன் அடிப்படைக்குள்ளே உலகம் தனது அதிகாரத்தை அடைய போட்டியிடுவதனால் சலுகைகளும், வாய்ப்புகளும், உதவிகளும், ஒத்துழைப்புகளும் முதன்மையாக உள்ளதுடன் கௌரவப்படுத்தல், ஆசுவாசப்படுத்தல், மதிப்பளித்தல், மகிழ வைத்தல் என்பன அதன் பிரதான உத்தியாகும்.

இதனைக்கருத்தில் கொண்டே மேற்கு இலங்கையில் புதிய ஆட்சியை தனது கட்டுப்பாட்டிற்கும் செல்வாக்குக்குள்ளும் வைத்திருக்க எடுத்த முயற்சியாகவே ஜி7க்கான அழைப்பு அமைந்துள்ளது.

இதனை கையாளுவதன் மூலம் சீனாபக்கம் சாய்வதையோ, சீனாவுடன் முழுமையாக ஒத்துழைப்பதையோ விரும்பவில்லை என்பதை மேற்கு புதிய அரசாங்கத்திற்கு சொல்லாமல் சொல்லியுள்ளது.

இலங்கையின் ஜெனிவா தீர்மானம் சார்பில் எடுக்கப் போகும் நிலைப்பாட்டுக்கு இந்திய ஜி7 உரையாடல் நடந்தமை இலங்கையர்களுக்கும் சங்கடத்தை தந்துள்ளது.

இதனை கையாளும் உத்தியுடனே ஜனாதிபதியும் பிரதமரும் செயல்பட்ட வண்ணம் உள்ளனர். இருவரும் உலகத்தை நன்கு பயன்படுத்த முனையும் போது உலகமும் புதிய அரசாங்கத்தை பாதுகாக்கும் விதத்தையும், அதேநேரம் மேற்குலகின் கட்டுப்பாட்டை மீறாத தன்மையையும் கருத்தில் கொண்டு செயற்பட முனைகிறது.

இலங்கையின் புதிய அரசாங்கத்தை பொறுத்தவரை மேற்கையும் சீனாவையும் ஒரே சமதளத்தில் வைத்திருக்க முனைகிறது.

இதனை நிராகரிக்கும் இருதரப்பையும் எப்படியாவது சரிக்கட்ட தமது இராஜதந்திர போட்டியில் ரணில் - மைத்திரி கூட்டணி ஆரம்பித்து நகர்த்திவருகிறது.

எனவே ஜி7 மகாநாடு இலங்கையை கௌரவப் படுத்தும் மென்னதிகாரத்தின் உத்தியின் வெளிபாடாகும். இந்த உலகம் ஆட்சியாளர்களின் ஜாம்பிகமான உத்திகளால் சுவையாக ஆடப்படும் களமாக உள்ளது.

# எங்களுக்கு...

(முதலாம் பக்கதொடர்ச்சி)
பெறும் நிலையில் அவை எவ்வாறுகளத்தை எதிர்கொள்ளப் போகின்றன என்பது வினாக் குறியே?

வடக்கிலிருந்து வெளிவரும் பத்திரிகைகைளப் பொறுத்தவரை அவை மக்களிடையே கருத்துருவாக்கத்தைஉண்டுபன்னுகின்றன.

என்பதையும் தாண்டி இலாப நோக்கமும் உண்டு அதைவிட மிக முக்கியானது. அவற்றிக்கிடையான அடிநிலை அரசியல் என்பது மிக முக்கியமானது.

அவ்அரசியல் என்பது தோற்றத்தின்போது இல்லாவிடினும் வலிந்து கொண்டு வரப்படுபவை. வடக்கில் ஆழமான அரசியல் சக்தி இல்லாவிடில் பத்திரிகை நடத்த முடியாது. அல்லது ஈடு கொடுக்க முடியாது இது எத்தனைப் பேருக்கு தெரியுமோ அதற்கு நாம் பொறுப்பல்ல, மக்கள் ஆதரவு இல்லாமல் எந்தப் பத்திரிகையும் இங்குநிலைத்து நிற்க முடியாது என்பதற்கு நல்ல உதாரணம்.

தினமுரசு தினப்பதிப்பு மற்றும் வாரப்பதிப்பு என்பவை ஒரு காலத்தில் தினமுரசு பத்திரிகை வரலாற்றில் அதிகம் விற்பனையான பத்திரிகையாக பதியப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே ஆனால் அது தனது ஆசிரியப் பீட கொள்கையினால் "நீரின்முன் பட்ட நெருப்பு போல தூர்ந்து போனது" வடபுலத்தில் ஆழமான கருத்து ஒன்று உண்டு பேப்பர் அடித்து பிழைக்க முடியாது.

பேப்பரால் எழுந்தவர்கள் உண்டு விழுந்தவர்கள்உண்டு அதேவேளை விழுந்து ஆழ அகலமாக எழுந்து நிற்பவர்களும் உண்டு. இங்கு அவசியம் மக்கள் ஆதரவு, மக்களுக்குத் தேவையான விடயங்களை பத்திரிகைகள் வழங்குவதுடன் மக்களின் மனதில் அவர்களை வழிப்படுத்தக் கூடிய கருத்துருவாக்கங்களையும் உண்டு பன்னக்கூடிய வகையில் பத்திரிகைகள் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

வாசிப்புப் பழக்கம் ஒட்டுமொத்தமாகவே குறைந்து போயுள்ளநிலையில்பத்திரிகைகளின் எதிர்காலமும் கேள்விக்குறியாகும் நிலைக்கு செல்லப்போவது யதார்த்தமே வடபுலத்தில் அன்றாடம் சராசரியாக 50ஆயிரத்துக்கும் குறைவான பத்திரிகைகளே விற்பனையாகின்றன.

பிரபலமான பத்திரிகைகள் கூட தமது விநியோகத்தை "ஊதிப்பெருப்பித்து" விளம்பர தாரர்களுக்கு காட்டினாலும் கூட உண்மை நிலை வேறு ஐந்து பேருக்கு ஒரு பத்திரிகை என்று சராசரியாக நோக்கினால் கூட ஒட்டு மொத்தமாக ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்களே பத்திரிகை வாசிக்கின்றனர் என்பது உண்மை.

நிலவரம் இப்படியிருக்க என்ன செய்யப்போகின்றன எம் பத்திரிகைகள்?

மலாயன் கபே
MALAYAN CAFÉ
A First Class Vegetarian Hotel

வடை என்றால் அது மலாயன் மாத்திரமே!

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகள்
மற்றும் விசேட வைபவங்களுக்குத் தேவையான சிற்றுண்டி வகைகளை
ஓடர் செய்து தரமாகவும், சுவையாகவும் பெற்றுக் கொள்ள
யாழ் நகரில் சிறந்த இடம்







36-38, Grand Bazaar, Jaffna, Sri Lanka.
Tel : 021 222 2373

lanka adz Digital Adz

Contact Details
+94 77 0770106
+94 77 3828594
sales@lankaadz.com
www.lankaadz.com

lankaadz இலவச விளம்பர சஞ்சிகைக்கு
இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து
விளம்பர முகவர்கள் தேவை....

மேலும் பொதுவான விடயங்கள் சம்பந்தமான சிறந்த
ஆய்வுகட்டுரைகள், கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள்
எதிர்பார்க்கப்படுகின்றது...!

தொடர்புகளுக்கு...
+94 77 077 0106
editor@lankaadz.com




## மூன்று ராஜ்ஜியங்கள்

## இந்தியாவில் இருந்துசென்ற விஜயன் முதல் சிங்களமன்னன்!



குவேனியிடம் விஜயன் அடைக்கலம் கோருதல்.

ஆதிகாலத்தில், இலங்கை ஒரே நாடாக இருந்தது இல்லை. பல அசர்களும், சிற்றரசர்களும் குறிப்பிட்ட பகுதிகளை ஆண்டு வந்தனர்.

ஐரோப்பியர்கள் இலங்கைக்குவந்த போது, இலங்கையில் மூன்று ராஜ்ஜியங்கள் இருந்தன :

1. தென் கோடியில் கொழும்பு பகுதியை உள்ளடக்கிய கோட்டை ராஜ்ஜியம். இந்தக் கோட்டையை ஏற்படுத்தியவனே அழகுக்கோன் என்ற தமிழன்.

2. கண்டி ராஜ்ஜியம்.

3. யாழ்ப்பாண ராஜ்ஜியம்.

இவற்றில் யாழ்ப்பாண ராஜ்ஜியத்தை எக்காலத்திலும் சிங்களவர்கள் ஆண்டது இல்லை. கோட்டையையும் கண்டியையும் தமிழர்களும், சிங்களவர்களும் மாறி மாறி ஆண்டு வந்திருக்கிறார்கள்.

பல ராஜ்ஜியங்களாக இருந்த இந்தியாவை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த ஆங்கிலேயர்கள், இலங்கையையும் ஓரே நாடாக மாற்றினார்கள். சிலோன் (இலங்கை) என்ற பெயரையும் சூட்டினார்கள்.

வட இந்தியாவில் இருந்து இலங்கை சென்ற விஜயன் என்ற இளவரசன்தான் முதல் சிங்கள அரசை நிறுவியவன் என்று சிங்களவரின்வரலாற்று நூலான மகாவம்சம் கூறுகிறது.

இந்தியாவின் இதிகாசங்களான "ராமாயணம்", "மகாபாரதம்" போன்றது பாலி மொழியில் எழுதப்பட்ட "மகாவம்சம்" என்ற நூல். இதைத் தங்களின் வேத புத்தகம் போல சிங்களவர்கள் மதிக்கிறார்கள்.

இதை தங்கள் "வரலாறு" என்று சிங்களவர்கள் கூறினாலும், நம்பமுடியாத கட்டுக்கதைகளும் இதில் உண்டு.

**விஜயன்**

இலங்கையில் சிங்கள வம்சத்தைத் தோற்றுவித்தவன் – இலங்கையின் முதல் சிங்கள மன்னன் விஜயன் என்று மகாவம்சம் கூறுகிறது.

விஜயன் பற்றி மகாவம்சத்தில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது :-

வட இந்தியாவில் உள்ள வங்காளம், ஒரிசா அடங்கிய பகுதிகள் ஒரு காலத்தில் லாலாதேசம் என்று அழைக்கப்பட்டது. இந்தராஜ்ஜியத்தை ஆண்ட மன்னன் பெயர் சிங்கபாகு. இவர் சிங்கத்துக்கும் ஒரு ராஜகுமாரிக்கும் பிறந்தவர்!

பிற்காலத்தில் இவருக்கு உண்மை தெரிகிறது. ஒரு குகையில் இருந்து சிங்கத்தை (தன் தந்தையை) கண்டு பிடித்துத் தலையை வெட்டித் துண்டிக்கிறார்.

சிங்கபாகு, சிகாசிவாலி என்ற பெண்ணை மணந்து அவளைப் பட்டத்து ராணி ஆக்குகிறார். இவர்களுக்கு 16 முறை இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. (அதாவது 32 குழந்தைகள்)

இந்தக் குழந்தைகளில் மூத்தவன் விஜயன். அவனைப் பட்டத்து இளவரசனாகச் சிங்கபாகு சியமிக்கிறார்.

**மக்கள் புகார்**

விஜயன் மிகவும் கொடூரமானவன். அவன் செய்த அட்டூழியங்கள் பற்றி, மன்னனிடம் மக்கள் முறையிடுகிறார்கள்.

மகனைத் திருத்த முயற்சிக்கிறார், சிங்கபாகு. ஆனால் விஜயன் திருந்தவில்லை. நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு, மக்களைத் துன்புறுத்துகிறான்.

அவன் அட்டூழியங்கள் எல்லை மீறிப்போனதால், மன்னனிடம் மக்கள் மீண்டும் முறையிடுகிறார்கள். விஜயனுக்கு மரண தண்டனை விதியுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள்.

இதன் காரணமாக, விஜயனையும் அவன் நண்பர்கள் 700 பேர்களையும் நாடு கடத்துகிறார், மன்னர். இவர்களை மூன்று கப்பல்களில் ஏற்றி எங்காவது போய் பிழைத்துக் கொள்ளுங்கள். இனியாது திருந்தி வாழுங்கள் என்று புத்திமதி கூறி அனுப்பி வக்கிறார். மூன்று கப்பல்களும் இலங்கையை அடைகின்றன.

**அடைக்கலம் கொடுத்த அழகி**

விஜயன் கப்பலை விட்டு இறங்கி, இலங்கைத் தீவில் காலடி வைக்கிறான். இது கி.மு. 543-ல் நடந்தது.

விஜயன் இறங்கிய இடம் அழகிய இயற்கைக் காட்சிகள் கொண்டது. அங்கு ஒரு மரத்தடியில் குவேனி என்ற பெண் அமர்ந்திருக்கிறாள். இவள் ராட்சச குலத்தைச் சேர்ந்தவள்.

(குவேனி என்ற சொல், கவினி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு ஆகும். கவினி என்றால் பேரழகு படைத்தவள் என்று பொருள். இலங்கையை ஆண்ட ராவணன் ராட்சதன் என்று கூறப்பட்டது போல, குவேனியையும் ராட்சத குலம் எனறு வர்ணிக்கிறது, "மகாவம்சம்")

குவேனியை விஜயன் சந்தித்து அடைக்கலம் கோருகிறான். அவள் அடைக்கலம் அளிக்கிறாள்.

இருவருக்கும் காதல் ஏற்பட்டு, திருமணம் செய்து கொள்கிறார்கள். இவர்களுக்கு ஒரு மனும், ஒரு மகளும் பிறக்கிறார்கள்.

**பாண்டிய இளவரசி**

விஜயனுடன் இலங்கை சென்ற அவனுடைய 700 நண்பர்களும் பல நகரங்களையும், கிராமங்களையும் உருவாக்குகிறார்கள். அந்தப் பகுதிகளை உள்ளடக்கிய இராஜ்ஜியத்துக்கு மன்னனாகும்படி, விஜயனைக் கேட்டுக் கொள்கிறார்கள்.

ஆனால் விஜயன் மறுத்து விடுகிறான். ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளவரசியை நான் மணந்தால் தான், சிம்மாசனம் ஏறமுடியும் என்று கூறுகிறான்.

இதன் காரணமாக, விஜயனின் நண்பர்கள் மதுரைக் குச் செல்கிறார்கள். மதுரை மன்னனுக்கு முத்துகள், தங்க ஆபரணங்கள் முதலியவற்றைப் பரிசாக வழங்கி, தங்கள் மன்னனான விஜயனுக்கு இளவரசியை மண முடித்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறார்கள்.


இதறகு பாண்டிய மன்னன் சம்மதிக்கிறார். பாண்டிய இளவரசியுடன், விஜயனின் 700 நண்பர்களுக்கும் 700 பெண்களைத் தேர்வு செய்து, இலங்கைக்கு அனுப்பி வைக்கிறார்.

**குவேனியின் கதி**

பாண்டியஇளவரசிதன்னை மணப்பதற்கு இசைந்து இலங்கைக்கு வந்து விட்டதை அறிந்த விஜயன் மிகவும் மகிழ்ச்சி அடைகிறான்.

குவேனியை அழைத்து, நான் பாண்டிய ராஜகுமாரியை மணக்கப் போகிறேன். என்னுடைய இரண்டு குழந்தைகளையும் என்னிடம் ஒப்படைத்துவிட்டு இங்கிருந்து போய்விடு என்று கூறுகிறான். *(தொடரும்)*

## புத்தகப் புதையல்




காலத்தை வெளிக்காட்டும் மூலங்களுள் அவசியமானது இலக்கியம். "வரலாற்று எழுதியல் " ஒரு பயில் துறையாகவோ, ஒரு பணி நிலையாகவோ மேற்கொள்ளப்படும் போது அது எப்பொழுதும் ஆளும் தரப்பின் ஒத்தூதியாக செயற்பட்டிருக்கிறது. ஆனால் இலக்கியம் அதனிலிருந்து வேறுபடுகிறது. இலக்கியம் யாரும் சொல்லி, ஏவி செய்யப்படுவதில்லை, அது படைப்பாளி காண்பவற்றையும் கேட்பவற்றையும் வைத்து அவனது மனம் நினைக்கும் அல்லது சொல்லத்துடிக்கும் உணர்ச்சிப் பிழம்பை கொட்டக்கூடியது.

அந்த வகையில் இம்முறை "புத்தகப் புதையல்" பக்கத்திற்கு **ஆ.முல்லைதிவ்யனின் தாய் நிலம் சிறுகதை தொகுப்பு** தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையில் அவரது சிறுகதைகள் அவர் வாழ்ந்த சூழல் அவர் எதிர்கொண்ட அனுபவங்கள் என்பவற்றின் சாரமாக வெளிப்பட்டிருக்கிறது.

சிறுகதை தொடர்பான கோட்பாடுகள் விமர்சன வரையறைகள் என்பவற்றை தூர எறிந்துவிட்டு இதை ஒரு காலம் தந்த அல்லது நிலைமாறுகால யுகத்தின் பிரதிநிதியும் கூற்றுக்கலாக நோக்குவோமாயின், இச்சிறுகதைகள் பொதுவாக யுத்தம் தந்த அவலம் / அவற்றின் பாதிப்பினால் தூர்ந்து போன எமது சமூகத்தில் தற்கால அடையாளங்களை, அழுகுரல்களை அப்படியே அச்சொட்டாக வெளிக்கொண்டுவருவதாக அமைந்துள்ளது.

"இளவயதில் கொடுமை கண்டு பொங்கி எழும், உண்மைகளை பேசத் துடிக்கும்" என்றவாறான அவரது வயதின் வீரியம் கதைகளுக்குள் வெளிப்பட்டிருக்கிறது. வட கிழக்கில் தற்காலத்தில் வாழும் இளந்தரப்பு இரண்டு வகையினதாக அமைந்திருக்கிறது.

யுத்தத்தின் கோர பிடிக்குள் சிக்கி பாதிக்கப்பட்டு இழப்புக்களை சந்தித்த ஒரு கூட்டம். அடுத்தது யுத்தம் தந்த வடு ஆறாத துயரம் என்பவற்றை அறியாமல் உண்டுவிட்டு ஊழைக் கதைகள் பேசித்திரியும் இளையோர் கூட்டம்.

இவற்றில் முதலாவது பிரிவைச் சேர்ந்த இப் படைப்பாளி அவரது கதைகளூடே அவரையும் பாதிக்கப்பட்ட அவர் சார்ந்த கூட்டத்தின் அல்லது இனத்தின் யதார்த்த வாழ்வியலை எழுத்துக்களூடே வெளிக்கொணர்ந்திருப்பது பாராட்டப்பட வேண்டியதே.

*– ஆசிரியர்–*



முல்லைதிவ்யன் முல்லை மண்ணின் புத்திரன். பிறப்பு மட்டுமல்லாது அவனது வளர் இளமைப்பருவமும் முல்லை மண்ணிலே கழிந்தது. போராட்டம் கருக்கட்டிய காலங்களில் எல்லாம் அவன் முல்லை மண்ணிலேயே இருந்தான்.

பின்னர் நடந்தவை எல்லாம் நாங்கள் அறிந்தவைதான். எல்லாம் எப்படியோ முடிந்துபோயிற்று.

இந்தப் பின்னணியின் வெளித்தெரியாத காயங்களையும் சோகங்களையும் அவன் கதைகள் பேசுகின்றன. உள்ளுக்குள் குமைந்து குமைந்து அழும் அழுகை.. இடையிடையே சில நம்பிக்கை ஒளிக்கீற்றுகள்.. இலட்சியக்கனவுகள் நிறைந்த இளமை உலகம்.

இவன் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரனும், இலங்கையின் தேசிய கிரிக்கெட் அணியில் விளையாடக்கூடிய அத்தனை தகுதிகளையும் கொண்டிருந்தவன்.

ஏற்கனவே கவனத்தை ஈர்த்த கவிஞரான முல்லைதிவ்யனின் " தாய்நிலம்" என்ற முதலாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும்.

எதிர்காலத்தில் முத்திரை பதிக்கப்போகும் ஒரு சிறுகதையாளனின் நம்பிக்கைதரும் தொகுப்பு. நுண்மையான அவதானிப்புகளுடன் எளிமையான, வசீகரமான தமிழில் விரிவு கொள்ளும் கதைகள்..

வாழ்த்துக்கள் முல்லைதிவ்யன்.

குப்பிழான் ஐ.சண்முகன்

# குப்பைக் காரர்களா நாம்?





காரன் அல்லது காரி என்பது உடைமைப் பொருள் சார்ந்து வருகிறது, பிச்சை எடுப்பவன் பிச்சைக்காரன் எனவும் காசு வைத்திருப்ப வன் காசுக்காரன் எனவும் வருவது போல பண்பாட்டின் மூலவர்களான நாம் என சொல்லிக்கொள்ளும் நாம் குப்பைகளை அடுத்தவர் முகத்தில் வீசுவதுபோல



தெருக்களில் கொட்டிக் கொண்டிருக்கிறோம்.

கடந்தமாதம் சுற்றுச் சூழல்தினம் எம்மை கடந்து போயிருக்கிறது. இருப்பினும் நாம் எத்தனை பேர் இது தொடர்பாக கவனத்தில் கொண் டிருக்கிறோம்.

படித்தவர் என்கிறோம் புத்தி ஜீவிகள் என்கிறோம் ஆனால் நாம்தான் வீதிகளிலும் அடுத் தவர் வீடுகளிலும் குப்பை களைக் கொட்டிக் கொண்டு கடந்து கொண்டிருக்கிறோம்.

குப்பை மயமாக யாழ்ப் பாணம் மாறிக்கொண்டிருக் கும் நிலையில் இது தொடர் பாக எத்தனை பேர் கவனத் தில் கொண்டிருக்கிறோம்?


O/L உடன்

பல்கலைக்கழகம் செல்ல முன்னரே வேலைவாய்ப்பு

(வேலை செய்து கொண்டே பட்டக்கல்வியினை பூர்த்தி செய்யலாம்)

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களுக்கு வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வி

Business & Hotel Management

UK Certified

Certificate → Diploma → Degree

With FREE English Course >>>

2016 A/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் July 20 ற்குள் பதிவினை மேற்கொண்டு

50 % கட்டணக் கழிவினை வெல்லுங்கள்.



3 மாத கால தொழில்துறைப் பயிற்சி

(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம்

Week & Weekend Batch

அனுமதிகளுக்கு: 077 3616 798

SIKARAM ACADEMY

Business · Hospitality · English

SCHOOL of HOSPITALITY

www.sikaram.lk

Sikaram Academy

021 222 0011

இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m


# முள்ளிவாய்க்கால் முத்தரும் முசுப்பாத்தி முத்தரும்



நாங்கள் இங்க சோத்துக்கு வழியில்லாம றோட்டு வழிய திரியிரம் உதுகளுக்குள்ள இங்க எங்கட ஊர்ர போட்டுல நின்டு போறவன் வார வன்எல்லாரும்தங்கட்ட மூஞ்சைகளை போட்டோ எடுத்து உந்த பேசுபுக் கிலையும் பேப்பரிலை யும் போடியினம் அதுக்குவேற எடுப்புவேற...

எங்கட பேப்பர் காரரும் அப்படித்தானே... எங் கள வைச்சுத்தானே வாழ்க்கை நடத்தினம் இப் படி புலம்பிக் கொண்டே தெருவழியே முள்ளி வாய்க்கால் முத்தர்வர அவர இடைமறிக்கிறார் முசுப்பாத்தி முத்தர்...

என்னடா... விசரன் மாதிரி புலம்பிட்டு வாராய்... உண்ட புலம்பல் தெரியும்தானே... இங்கே யாருக்கும் மனசுல எங்கட இனத்தின்ற கஷ்டம், கவலை ஒருத்தருக்கும் இல்லை.

இழந்தவனுக்கும் மட்டும்தான் கவலை வேரையா ருக்கும் இல்லை.

இங்கபார் நான் எப்படியிருந்தனான் ஐயாட்ட போனப்பிறகு ஐயா என்னை நல்லா வைச் சிருக்கிறார் பார்த்தியா...?

முள்ளிவாய்க்கால் முத்தர் இடை மறிக் கிறார்.

டேய் ஐயா... அவரை அவர் உண்மையாவே நல்ல மனுசன் தானே... அவர் எங்களுக்காகத் தானே பாடுபடுகிறார். முசுப்பாத்தி முத்தர் இடை மறிக்கிறார்.

போடா... விசரா... அவர் எல்லாம் சும்மா படம் தான் நீபோய் சோத்துக்கு வழியில்லை என்று போய் அவரச் சந்தி உன்ன கணக்கும் எடுக்க மாட்டார். எல்லாம் இஞ்ச எங்கட தலைவர் மார்ர நிலமை இப்படித்தான்.

நீ சும்மா அவயள் பேப்பரில புலம்பிரத எல் லாம் உண்மை என்று நினைச்சா உன்ன மாரி மடயன் யாரும் இருக்கானே...

பேசாம உண்ட சோத்துக்கு வழியப்பார் என்று தனது கையில் இருந்த ஆயிரம் ரூபாயை முள்ளி வாய்க்கால் முத்தரின்ட பொக்கட்டில் திணித்து விட்டு நடையைக் கட்டலானார் முசுப்பாத்தி முத்தர்.

ஐயாவின் வீட்டை நோக்கி...

இப்பத்திரிகை பல்கலைக்கழக மாணவன் ச.திருச்செந்தூரனை ஆசிரியராகக் கொண்டு நாவலர் பிறிண்டர்ஸில் அச்சிடப்பட்டது.